
பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

# இயேசு விடுவிக்கிறார்

மரம் : 38 கனி : 8 ஆகஸ்ட் - 2017

சகோ. மோகன் சி. லாசரஸ்



## பயப்படாதே

## இயேசு கிறிஸ்து உங்களுக்கு அற்புதம் செய்வார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சகோதரனிடமிருந்து...

**இ**யேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!

அமெரிக்கா தேசத்திலிருந்து இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்! அமெரிக்கா, கனடா தேச ஊழியங்களில் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார். தேசத்திற்காக திறப்பிலே நின்று ஜெபிக்கும்படியாக, அனேகர் மீது மன்றாட்டின் ஆவியை கர்த்தர் ஊற்றினார். இந்த தேசங்களில் ஒரு ஜெப எழுப்புதல் உண்டாகி இருப்பதைப் பார்க்க முடிகிறது.



சுவிசேஷக் கூட்டங்களில் அனேகர் இரட்சிக்கப்பட்டார்கள். கர்த்தர் பெரிய அற்புதங்களைச் செய்து, அனேகரை சாட்சியாக நிறுத்தினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

ஒவ்வொரு நாளும் உங்கள் ஜெபத்தின் வல்லமையை என்னால் உணர முடிந்தது. எனக்காக ஜெபிக்கிற உங்களுக்காக, நான் **கர்த்தரைத் துதிக்கிறேன்!** இம்மாதம் (2017) **ஆகஸ்ட் 15**ம் தேதி, காலை 9:00 - மாலை 6:00 மணிவரை **திருச்சி**யில் நடக்க இருக்கிற **விசேஷித்த எழுப்புதல் உபவாச ஜெபத்திற்கு** உங்களை **அன்புடன் அழைக்கிறேன்.** நம் தேசத்தை நேசித்து, உலகத்தின் பல தேசங்களிலிருந்து வந்து ஊழியம் செய்த மிஷனெரிகள், தரிசனத்தோடு ஆரம்பித்த பல கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் போன்றவைகள், அவைகள் ஆரம்பிக்கப்பட்டதின் நோக்கத்தை மறந்து, வியாபார ஸ்தலங்களாக ஆக்கப்பட்டு விட்டன. பல மருத்துவமனைகள் மூடப்பட்டு விட்டன. **இருக்கிறதையாவது நாம் பாதுகாத்தாக வேண்டும். அதற்காக ஜெபிக்கத்தான், இந்த எழுப்புதல் உபவாச ஜெபம்.**

அன்றைய தினம், அன்பு அண்ணன் R. **ஸ்டான்லி** (BYM) அவர்களும், **நானும்** இது சம்மந்தமான அனேகக் காரியங்களைப் பகிர்ந்து கொண்டு, ஜெபத்தை நடத்துவோம். **வாருங்கள், நாம் சேர்ந்து ஜெபிப்போம்.** கிறிஸ்தவக் கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளில் எழுப்புதல் உண்டாக வேண்டும். நம் ஜெபத்தினால், இவைகளைப் பாதுகாக்க வேண்டும். **கட்டாயம் வாருங்கள்.** ஜெபம் முடிந்த பிறகு, **நான் உங்களைச் சந்தித்து,** உங்களுக்காக **ஜெபிக்க விரும்புகிறேன்.**

தேவனுடைய கூடாரத்தில், **ஜெப கோபுரத்தைக் கட்டும் பணி**யை ஆரம்பிக்க இருக்கிறோம். இதற்காக **ஜெபித்துக் கொள்ளுங்கள்.** நமது **புது வாழ்வு பல்நோக்கு மருத்துவமனை**க் கட்டிட வேலையும் துரிதமாக நடைபெற்று வருகிறது. நம்முடைய **அறுவடை வேதாகமக் கல்லூரி**யில், இந்த ஆண்டிற்கான புதிய மாணவர்களோடு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஆத்துமாக்களை அறுவடை செய்கிறவர்களாக வாலிபர்கள் உருவாக **ஜெபியுங்கள்.**

ஒவ்வொரு மாதமும் **கொழும்பு பட்டணத்தில்** நடைபெற்று வரும் **திறப்பின் வாசல் ஜெபத்தை தேவன் அற்புதமாக நடத்தி வருகிறார்.** கட்டாயமாக இந்த ஜெபத்தில் நீங்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இலங்கை தேசத்திலே நாம் செய்து வருகிற ஊழியங்களுக்காக ஜெபித்து, கொடுத்து தாங்கி வருகிற உங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிக்க **ஜெபிக்கிறேன்.**

**தமிழ்நாடு முழுவதும்** கிராமம் கிராமமாகச் சென்று சுவிசேஷம் அறிவிக்க, **500 மிஷனெரி**களை அனுப்ப ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறோம். இதற்காக லட்சக்கணக்கான சுவிசேஷப் பிரதிகள் அச்சடிக்கப்பட இருக்கிறது. எல்லாக் காரியங்களுக்காகவும் **ஜெபியுங்கள்.** செய்து முடிக்க வேண்டிய ஊழியப் பணிகள் அதிகம்! அதற்கான தேவைகளும் அதிகம்! கர்த்தர் இந்தத் **தேவைகளை எல்லாம் சந்திக்க ஜெபியுங்கள்.** முக்கியமாக, **எனக்காக, என் மனைவிக்காக,** சகோ. A. **அப்பாத்துரை** அவர்களுக்காக, நம் **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியக் **குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். தினமும் 5 நிமிடங்கள்** எங்களுக்காக **ஜெபித்தாலே,** கர்த்தர் **பெரிய காரியங்களைச் செய்வார்.**

உங்களுக்காக, உங்கள் குடும்பத்திற்காக, நாங்களும் **ஜெபிக்கிறோம்!**

உங்கள் அன்பும், ஜெபமும்தான், எங்களை ஊழியத்தில் உற்சாகப்படுத்துகிறது. எத்தனையோ பாடுகள், உபத்திரவங்கள் மத்தியில் நாங்கள் கடந்து போனாலும், நீங்கள் காண்பிக்கிற அன்பும், உங்கள் ஜெபமும்தான் எங்களை பெலப்படுத்துகிறது. நீங்கள் எங்களுக்குக் காண்பிக்கிற அன்பை நினைத்தருளி, கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து, உயர்த்துவாராக!


கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,

Mohan C L.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயப்படாதே,

# இயேசு கிறிஸ்து உங்களுக்கு அற்புதம் செய்வார்!

## உங்களுக்கு ஒரு அற்புதம் தேவை:

ஆம். இதை வாசிக்கிற உங்களுக்கு ஒரு அற்புதம் தேவை! உங்கள் வியாதி சுகமாக, ஒரு அற்புதம் தேவை! உங்கள் பிரச்சனைகள் மாற, உங்களுக்கு அற்புதம் தேவை! உங்கள் போராட்டம் நீங்க, உங்களுக்கு ஒரு அற்புதம் தேவை! உங்களுக்கு ஒரு வேலை கிடைக்க, ஒரு அற்புதம் தேவை! படிப்பில் நீங்கள் வெற்றி பெற ஒரு அற்புதம் தேவை! உங்கள் கடன்பாரம் மாற, ஒரு அற்புதம் தேவை! உங்கள் வேலையில், உங்கள் தொழிலில் ஒரு அற்புதம் தேவை! உங்கள் குடும்ப தேவைகள் சந்திக்கப்பட ஒரு அற்புத் தேவை!

உங்கள் வாழ்க்கை மாற, உங்களுக்கு ஒரு அற்புதம் தேவை! உங்கள் ஊழியம் வளர, ஒரு அற்புதம் தேவை! உங்கள் விருப்பங்கள் நிறைவேற, ஒரு அற்புதம் தேவை!

இன்றைக்கு உங்களுக்கு தேவை ஒரு அற்புதம்!

"ஐயா! எத்தனையோ மருந்துகளைப் பயன்படுத்தி விட்டேன்; என் வியாதி, என் பிள்ளைகளின் வியாதி சுகமாகவில்லையே! எவ்வளவோ, முயற்சித்து விட்டேன். எனக்கு ஒரு வேலை கிடைக்கவில்லையே! நான் எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிக்கும் பாடங்கள் என் மனதில் தங்குவதில்லையே! நான் எவ்வளவு சம்பாதித்தும் ஒரு மிச்சமுமில்லையே! என் குடும்பத்திற்குள் சமாதானம் இல்லையே! பிள்ளைகளின் திருமணத்திற்கு வழியில்லையே! கடன் பாரம் நீங்கவில்லையே! ஊழியத்தில் ஆசீர்வாதமில்லையே!"

இப்படி நீங்கள் ஏதோ ஒன்றைக் குறித்துக் கலங்கிக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா?

## உங்களுக்குத் தேவை ஒரு அற்புதம்!

ஆம்! அற்புதம்தான், உங்கள் காரியத்தில் மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

உங்களுக்கு ஒரு அற்புதம் தேவை என்பதை, நீங்கள் உணருகிறீர்களா? அப்பொழுதுதான், நீங்கள் அற்புதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நீங்கள் உங்கள் வாழ்க்கையில் அற்புதத்தைக் குறித்து, ஏனோதானோ என்று, அக்கறையற்று; இருப்பீர்களானால், அற்புதத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது.

என் காரியம் மாறுவதற்கு, எனக்கு ஒரு அற்புதம் தேவை என்பதை நீங்கள் உணரும் போதுதான், அற்புதத்தைக் காண முடியும்.

அற்புதம் உங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரும். என் 14வது வயதில், என் வலது கால் வியாதியினால் பாதிக்கப்பட்டு, படுத்த படுக்கையில் நான் இருக்கும்போது, பல டாக்டர்களிடம் ஓடினோம். டாக்டர்கள் கைவிட்டார்கள். ஆயிரக்கணக்கான மாத்திரைகள் சாப்பிட்டும், எந்தவித மாற்றமும் இல்லை. ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவழித்தும் எவ்வித பயனும் இல்லை.

எல்லாம் செயலற்ற சூழ்நிலையில் எனக்கு ஒரு அற்புதம் தேவையாயிருந்தது. நம்பியிருந்த மருத்துவம் முடியாது என்று கூறினபோது, அற்புதம் நடந்தால் தான் நான் சுகம் பெற முடியும், பிழைக்க முடியும் என்ற சூழ்நிலை வந்தது.

ஆம். அந்த நேரத்தில் தான் ஒரு அற்புதம் நடந்தது. இயேசு அந்த அற்புதத்தைச் செய்தார். இயேசு கிறிஸ்து எனக்கு அற்புத சுகத்தைக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அற்புதம் என் வாழ்க்கை முழுவதையும் தலைகீழாக மாற்றிவிட்டது. நடக்க முடியாத என்னை, நடக்கச் செய்தது. பாவ வாழ்க்கையிலிருந்து விடுதலை கொடுத்தது. அவருடைய ஊழியத்தைச் செய்யும்படியாக வைத்தது.

இன்று உங்களுக்கு ஒரு அற்புதம் தேவை. உங்கள் வாழ்க்கை மாற, நீங்கள் சுகம் பெற, நீங்கள் சாட்சியாக மாற, உங்களுக்கு ஒரு அற்புதம் நடந்தாக வேண்டும்.

உங்களுடைய முயற்சிகள்
தோல்வியடைந்து விட்டது, உங்கள்
பிரயாசங்கள் ஜெயம் கொடுக்கவில்லை,
நீங்கள் செலவு செய்தும் சுகம் பெறவில்லை,
உங்களுக்குத் தேவை ஒரு அற்புதம்.

ஆம், அற்புதமே உங்கள் பிரச்சனைக்கு பதில். அற்புதமே உங்களுக்கு உதவி செய்ய முடியும். இப்பொழுது உங்களுக்குத் தேவை ஒரு அற்புதம்.

# இயேசு உங்களுக்குத் தேவையான அற்புதத்தைச் செய்வார்!

ஆம். உங்களுக்கு ஒரு அற்புதம் தேவை என்று எண்ணுகிறீர்களல்லவா? அந்த அற்புதத்தை இயேசு கிறிஸ்து உங்களுக்குச் செய்வார்.

12 ஆண்டுளாக ஒரு கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட பெண், தன் சொத்துக்களை எல்லாம் விற்று, மருத்துவர்களுக்கு செலவழித்தும் சுகம் கிடைக்காமல், வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தாள். தனக்கு ஒரு அற்புதம் தேவை என்பதை உணர்ந்தாள், இயேசுவிடம் வந்தாள். இயேசு கிறிஸ்து அற்புதமாக சுகத்தைக் கட்டளையிட்டார்.

சுகமாகாது என்ற வியாதி கொண்ட குஷ்டரோகி ஒருவன், அற்புதத்திற்காக இயேசுவண்டை வந்தான். இயேசு அவனுக்கு ஒரு அற்புதத்தைச் செய்து, குணமாக்கினார்.

ஐந்து அப்பங்களும் இரண்டு மீண்களும் தான் உண்டு என்று, இயேசுவின் கரத்தில் அதை கொடுத்தபோது, ஒரு அற்புத்ததின் மூலம் ஆயிரக்கணக்கான மக்களின் தேவைகளைச் சந்தித்தார். ஆம்! இயேசு கிறிஸ்து தேவைக்கேற்ற அற்புதங்களைச் செய்து, ஜனங்களை மகிழச் செய்தார்.

உனக்குத் தேவையான ஒரு அற்புதத்தைச் செய்ய, அவர் ஆயத்தமாயிருக்கிறார். உன் பாவ வாழ்க்கை மாறுவதற்காக, உன் வியாதியின் வேதனை நீங்குவதற்கு, உன் கடன் பாரங்கள் விலகுவதற்கு, உன் தேவைகள் சந்திக்கப்படுவதற்கு, வேலைக்கு வழி திறக்கப்படுவதற்கு, படிப்பில் ஜெயம் பெறுவதற்கு இயேசு கிறிஸ்து உனக்கு ஒரு அற்புதத்தைச் செய்ய முடியும்.

உன் வியாதி எவ்வளவு கொடூரமாக இருந்தாலும், உன் பிரச்சனை எவ்வளவு பெரிதாக இருந்தாலும், இயேசு உனக்கு அற்புதத்தைச் செய்ய முடியும்.

அவரால் முடியாத காரியம் ஒன்றுமில்லை. **(லூக்கா 1:37).**

அவரால் செய்யக்கூடாத அற்புதம் ஒன்றுமில்லை. **(எரேமியா 32:17).**

பிறவிக் குருடனுடைய கண்களை அவர் திறந்தார். பிறவிச் சப்பாணியை அவர் நடக்கும்படி செய்தார். மரித்தோரை எழுப்பினார். காற்றையும்,



கடலையும் அதட்டி, அமைதல் படுத்தினார். கடல் அலைகள் மீது நடந்தார். மரித்த நாறிப்போன சரீரத்தை நான்கு நாட்கள் கழித்து, உயிரோடு எழுப்பினார். ஆம்! அவருடைய அற்புதங்கள் தான் எத்தனை! எத்தனை!

அன்று இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்கிறவராக இருந்த இயேசு கிறிஸ்து, இன்றும் ஜீவனோடு இருக்கிறார். **(வெளி. 1:18).** மாறாதவராயிருக்கிறார். **(எபி. 13:8).** அன்று செய்த அற்புதங்கள், இன்றும் செய்ய வல்லவராயிருக்கிறார். என் வாழ்க்கையில் செய்தார். நடக்க முடியாமல், படுத்த படுக்கையில் கிடந்த என்னை அற்புதமாக சுகமாக்கினார். ஒவ்வொரு நாளும் அற்புதமாக வழி நடத்தி வருகிறார்.

இயேசு கிறிஸ்து பட்சபாதமுள்ளவரல்ல. **(அப். 10:34).** எனக்கு அற்புதம் செய்த இயேசு, உங்களுக்கும் ஒரு அற்புதத்தைச் செய்வார்.

இதற்காகவே அவர் உலகத்தில் வந்து, தன் ஜீவனை சிலுவையில் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதமாய் நம்முடைய பாவ வாழ்க்கையை மாற்றுவதற்காக, நம்முடைய பாவங்களையெல்லாம் தம்முடைய சரீரத்தில் சிலுவையில் சுமந்தார். **(1 பேதுரு 2:24).**

நம்முடைய நோய்களை மாற்றி, அற்புத சுகத்தைக் கொடுக்கும்படியாக, நோய்களை எல்லாம் அந்த சிலுவையிலே சுமந்து விட்டார். **(மத்தேயு 8:17).**

நம்முடைய பிரச்சனை, பாடுகளை மாற்றி, அற்புதங்களைச் செய்யும்படியாக, நம்முடைய துக்கம், பாடுகளை சிலுவையில் சுமந்து விட்டார். **(ஏசாயா 53:4).**

எதற்காக?

உங்களுக்குத் தேவையான அற்புதத்தைச் செய்வதற்காக, உங்கள் அருகில் நிற்கிறார்.

இப்பொழுது நீங்கள் எந்த இடத்தில் இருந்து, இதை வாசித்துக் கொண்டிருந்தாலும், உங்கள் அருகில் இயேசு நிற்கிறார். உங்களுக்கு ஒரு அற்புதம் செய்வதற்காக.

**கேட்டு, விசுவாசித்து உங்கள் அற்புதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்!**

**கேளுங்கள் கொடுக்கப்படும். (மத்தேயு 7:7). என்னை நோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன். (சங்கீதம் 50:15)** என்று கர்த்தர் சொல்கிறார்.

**தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும்** என்று கூப்பிட்ட குருடர்கள், **அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். (மத்தேயு 9:27-30). ஆண்டவரே! எனக்கு இரங்கும்** என்று கூப்பிட்ட தாய், தன் மகளின் வாழ்க்கையில் **அற்புதம் பெற்றுக் கொண்டார்கள். (மத்தேயு 15:22-28). ஆண்டவரே என் மகனுக்கு இரங்கும்** என்று தகப்பன் கூப்பிட்டபடியால், மகனில் ஒரு **அற்புத்தை இயேசு கிறிஸ்து செய்தார்.**

ஆம்! கேட்டார்கள், விசுவாசித்தார்கள், அற்புதத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

இன்றும் நீங்கள் கேட்டு, **உங்கள் அற்புதத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.** ஏனென்றால், **கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான். (மத்தேயு 7:8)** என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

**"நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்." (மத்தேயு 21:22).**

எத்தனை அற்புதமான வாக்கை இயேசு கிறிஸ்து நமக்குத் தந்திருக்கிறார்!

உங்கள் தேவை எதுவானாலும், உங்கள் பிரச்சனைகள் எதுவானாலும், எவ்வளவு பெரிதானாலும், விசுவாசத்தோடு இயேசுவிடம் கேட்டு, நீங்கள் அற்புதத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

**"என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்." (யோவான் 14:14)** என்று இயேசு கிறிஸ்து கூறியபடி, இயேசுவே எனக்கு இதைச் செய்யும்.

இந்த அற்புதத்தைச் செய்யும் என்று, இயேசுவின் நாமத்தைச் சொல்லி கேளுங்கள். பெற்றுக் கொள்வீர்கள்.

கேட்பீர்களா? விசுவாசிப்பீர்களா? பெற்றுக் கொள்வீர்கள்.

இப்பொழுது, உங்களுக்கு எந்தக் காரியத்தில் அற்புதம் தேவையாயிருக்கிறதோ, அந்தக் காரியத்தை இதில் எழுதுங்கள்.

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

விசுவாசத்தோடு உங்கள் கரத்தை இதன்மீது வைத்து ஜெபியுங்கள்.



அற்புதங்களின் தேவனே!
எனக்குத் தேவையான அற்புதத்தைச் செய்ய, நீர் வல்லமையுள்ளவராய் இருக்கிறபடியினால், உம்மை நான் ஸ்தோத்தரிக்கிறேன்!

இப்பொழுது எனக்குத் தேவையான இந்த அற்புதத்தைச் செய்யும்படி, இயேசுவின் நாமத்தில் வேண்டிக் கொள்கிறேன், அற்புதங்களை எதிர்பார்க்கிறேன்.

இயேசுவின் நாமத்தில் ஆமென்! ஆமென்!

**நீங்கள் பெற்றுக் கொண்ட அற்புதங்களை, ஆண்டவரின் நாமத்தை மகிமைப் படுத்தும்படியாக எங்களுக்கும் எழுதுங்கள்.**

**எங்கள் முகவரி: 57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயம் பெற்றவர்கள்!





**பிரியமானவர்களே,**
**"ஜெயம் பெற்றவர்கள்!" என்கிற இந்தப் பகுதியின் மூலமாக உங்களை சந்திப்பதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, எந்தவொரு மனிதனையும் ஆசீர்வதித்து உயர்த்தி, மகிழப் பண்ணுகிறவர்! நம்மை ஆசீர்வதித்து, மேன்மையாக வைப்பதுதான் கர்த்தருக்குப் பிரியம்!**

**ஒருவேளை நீங்கள் இன்றைக்கு, பணப் பிரச்சனையில், தொழிலில் தடுமாறிய நிலைமையில், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கலாம்! "என் வாழ்க்கையில் ஒரு ஆசீர்வாதமும் இல்லையே! ஒரு முன்னேற்றமும் இல்லையே! இன்னும் அப்படியேதானே இருக்கிறோம்! பணக் கஷ்டம்! நெருக்கம்!" என்று சொல்லி, நீங்கள் கலங்கிக் கொண்டிருக்கலாம்!**

**கர்த்தர் ஆசீர்வதிக்க ஆயத்தமாகத்தான் இருக்கிறார். ஆனால், "அந்த ஆசீர்வாதத்தை எப்படிப் பெற்றுக் கொள்வது?" என்று தெரியாமல் அனேகர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டவர்களுடைய அனுபவ சாட்சிகளை இந்தப் பகுதியில் பிரசுரித்து வருகிறோம். இதன் மூலமாக அனேகர் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள்.**

**இந்த மாதத்திலும், திருச்சி-மணப்பாறையைச் சேர்ந்த, சகோ. செல்வம் அவர்களுடைய அனுபவ சாட்சியை உங்களுக்காக இங்கே தருகிறோம். வாசித்து, தேவாசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

**- உங்கள் சகோதரன்.**

## அர்ப்பணித்து வாழ்கிறோம்! ஆசீர்வாதம் பெறுகிறோம்!



நாங்கள் பரம்பரையாக **தச்சுத் தொழில்**தான் செய்து கொண்டிருந்தோம். அதுவும், சுமார் **20 வருடங்களாக** நான் **கூலிக்குத்தான்** தச்சு வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்கு சம்பளம், வெறும் ₹ 100/-தான்! தினமும் காலையில் 6:30 மணிக்கு வேலைக்குப் போனால், இரவு 10:00 மணிக்குத்தான் வீட்டிற்குத் திரும்புவேன். வேலை மிகவும் கஷ்டமாக இருக்கும்.

என்னுடைய சொந்த ஊரிலிருந்து நான் மணப்பாறைக்கு வந்த சமயத்தில், என் வங்கிக் கணக்கில் இருந்த பணம் வெறும் ₹ 700/-தான்! அந்த நாட்களில், நாங்கள் 10க்குப் 10 அளவுள்ள ஒரு சிறிய அறையில்தான் குடியிருந்தோம். அந்த அறைக்குள்தான் பீரோ, கட்டில் மற்றும் இதர பொருட்களை எல்லாம் வைத்திருந்தோம். மிகுந்த நெருக்கத்தில்தான் வாழ்ந்து கொண்டிருந்தோம். அந்தச் சிறிய அறைக்குள் படுப்பதற்குக் கூட இடம் இருக்காது. மிகவும் கஷ்டப்பட்டுத்தான் சமைத்து, சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்.

அந்த நாட்களில் நான் இரட்சிக்கப்படாமல் இருந்தாலும், பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கிற பழக்கம் எனக்கு இருந்தது. ஆனாலும், என்னுடைய நண்பர்களோடு சேர்ந்து மது பானம் குடிக்கிறவனாகவும், புகையிலை போடுகிற பழக்கம் உடையவனாகவும் இருந்தேன். அப்பொழுது என் மனைவி, "வேதாகமத்தையும் வாசித்துக் கொண்டு, இவ்வளவு பாவங்களையும் செய்து கொண்டு இருக்கிறீர்களே! இனிமேல் நீங்கள் வேதாகமத்தை வாசிக்காதீர்கள்." என்று சொல்லி, என்னை மிகவும் கடிந்து கொள்வாள். என்னை வாசிக்க விடாதபடி வேதாகமத்தை மறைத்து வைத்து விடுவாள்.

ஆனாலும், நான் எவ்வளவு மது பானம் குடித்தாலும், எப்படியாவது தேடிக் கண்டுபிடித்து, இரவில் வேதாகமத்தை வாசித்து விட்டுத்தான் படுக்கைக்குச் செல்கிறவனாக இருந்தேன்.

இந்நிலையில், என் மனைவி ஒரு பொருத்தனையோடு என்னுடைய விடுதலைக்காக ஜெபிக்க ஆரம்பித்தாள். கர்த்தர் அவளுடைய ஜெபத்தைக் கேட்டு, என்னுடைய **பாவப் பழக்கத்திலிருந்து** எனக்கு **முழுமையான** ஒரு **விடுதலையைக்** கொடுத்தார்.

அந்த நெருக்கமான காலக் கட்டங்களில், அடிக்கடி நான் **'இயேசு விடுவிக்கிறார்'** தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதுண்டு. ஜெப வேளையில், சகோதரர் அவர்கள் தொழில் செய்கிறவர்களுக்காக ஜெபிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதெல்லாம், நானும் அவர்களோடு இணைந்து ஜெபிப்பேன். சகோதரர் அவர்களுடைய தேவ செய்தியைக் கேட்டு, கர்த்தரால் தொடப்பட்டு, தேவ கிருபையினால் **இரட்சிக்கப்பட்டேன்.**

அதற்குப் பிறகு ஜெபிக்கிறவனாக மாறினேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, சொந்தமாக ஒரு **3 செண்ட் நிலத்தை வாங்கக்** கிருபை செய்தார். அதில் ஒரு சிறிய வீட்டைக் கட்டி, அங்கே குடி வந்தோம்.

நான் இரட்சிக்கப்படாமல் இருந்த சமயத்தில்தான், நாலுமாவடியில் நடைபெற்ற வியாபாரிகள் ஆசீர்வாத உபவாச ஜெபத்தில் முதன்முதலாக வந்து கலந்து கொண்டேன். அந்த ஜெபத்தில் நான் கலந்து கொள்ள வரும்போது, எனக்கு **₹ 3 லட்சம் கடன்** இருந்தது. அன்றைய தினம் அனேகர் சொன்ன சாட்சிகளைக் கேட்டு, "இப்படி எல்லாம் நடக்குமா?" என்று, மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனேன்!

அன்றைக்கே, "இந்த சாட்சிகள் எல்லாம் உண்மை என்றால், அடுத்த வியாபாரிகள் ஆசீர்வாத உபவாச ஜெபத்திற்கு நான் வரும்போது, சொந்தக் காரில்தான் வர வேண்டும்." என்று சொல்லி, ஒரு பொருத்தனையோடு ஜெபித்து விட்டுச் சென்றேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, மிகவும் ஆச்சரியமாக, அடுத்த வருடத்திற்குள்ளாக **சொந்தமாக ஒரு கார்** வாங்க எனக்குக் கிருபை செய்தார்.

அதற்குப் பிறகு, ஒவ்வொரு வருடமும் வியாபாரிகள் ஆசீர்வாத உபவாச ஜெபத்திற்கு நான் வரும் போதெல்லாம், இரட்சிக்கப்படாத 2 பேரையாவது கூட்டிக் கொண்டு வந்து விடுவேன். கர்த்தர் என்னை ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். அதன் நிமித்தமாக, 'சுடரொளி' என்கிற பெயரில் **சொந்தமாக ஒரு கடையை**, கர்த்தர் எங்களுக்கு வாய்க்கப் பண்ணினார். அடுத்ததாக **இன்னொரு கடையையும் சொந்தமாக வாங்கி**, தொழில் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். **கூடுதலாக மர வேலை செய்யும்படியான ஒரு வாய்ப்பையும்** கர்த்தர் எங்களுக்குக் கொடுத்தார். அதிலிருந்து வருகிற வருமானத்தின் மூலமாக, **மாதந்தோறும் ஒரு மிஷனெரியைத் தாங்க** ஆரம்பித்தோம். நான் கர்த்தருடைய **ஊழியத்திற்குக் கொடுக்கக் கொடுக்க**, தொழிலில் கர்த்தர் **வளர்ச்சியைக்** கொடுத்தார். இப்பொழுது எங்களுடைய **மாத வருமானம் ₹ 50 ஆயிரம்!**

மட்டுமல்ல, "மற்றவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும்." என்று கர்த்தருக்குள் தீர்மானம் செய்து, வங்கியில் கடன் பெற்று நான் வாங்கி இருந்த என்னுடைய ஒரு மோட்டார் சைக்கிளை ஒரு சகோதரருக்கு இலவசமாகக் கொடுத்தேன். அதன் நிமித்தமாக, இப்போது நான் **எந்த வாகனம் வாங்கினாலும், ரொக்கப் பணம் கொடுத்து வாங்கும்படியாக**, கர்த்தர் என்னை ஆசீர்வதித்து வருகிறார்.

அன்றைக்கு, குடியிருக்க ஒரு வீடு இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோம். இன்றைக்கு, **₹ 50 லட்சம் மதிப்பில் சொந்தமாக ஒரு வீட்டை** கட்டி முடித்து, அதில் குடியேற கர்த்தர் மாபெரும் கிருபை செய்திருக்கிறார்.

ஆரம்ப காலத்தில் சொந்தமாக ஒரு சைக்கிள் கூட இல்லாமல், ஒரு வாடகை சைக்கிளைத்தான் ஓட்டிக் கொண்டிருந்தேன். இன்றைக்கு கர்த்தர் எங்களை ஆசீர்வதித்து, **சொந்தமாக ஒரு காரையும், 2 மோட்டார் சைக்கிள்களையும்** கொடுத்திருக்கிறார்.

நான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கு முன்புவரை, சம்பாதிக்கிற பணம் எல்லாம் வீணாகச் செலவாகி விடும். வாரத்தில் 5 நாட்கள் மருத்துவமனையில்தான் இருப்போம்! தினமும் ஊசி போட்டுக் கொண்டேதான் இருக்க வேண்டும்!

குடும்பமாக இரட்சிக்கப்பட்ட பிறகுதான், மருத்துவச் செலவே இல்லாதபடி கர்த்தர் எங்களை ஆசீர்வதித்து வருகிறார்! தொழிலிலும் ஒவ்வொரு கட்டத்தில் வளர்ச்சியைக் கொடுக்கிறார்! கையின் பிரயாசங்களை எல்லாம் ஆசீர்வதிக்கிறார்! கர்த்தரிடத்தில் நாங்கள் ஜெபத்தில் கேட்கக் கேட்க, **நீதி. 16:3**ன்படி, கர்த்தர் எங்களுக்கு எல்லாவற்றையும் வாய்க்கச் செய்கிறார்!

"எங்களுடைய இந்த ஆசீர்வாதங்களுக்கு எல்லாம் இன்னொரு காரணம்: **முதலாவது இயேசு கிறிஸ்து**வைத்தான் எங்களுடைய **தொழில் பங்காளராக** நாங்கள் வைத்திருக்கிறோம். மற்றவை எல்லாம் எங்களுக்கு இரண்டாவதுதான்.

மட்டுமல்ல, எங்கள் **கடைக்கு வருகிற எல்லோரிடத்திலும்**, அவர்கள் கேட்டாலும் சரி, கேட்கா விட்டாலும் சரி, **இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லி விடுவோம்.** இப்படியாக நாங்கள் எல்லாவற்றிலும் கர்த்தருக்கு முன்னுரிமை கொடுத்து, அவருடைய கற்பனைகளைக் கைக் கொண்டு, அதற்கு நாங்கள் குடும்பமாக அர்ப்பணித்து வாழ்கிறபடியினால்தான், கர்த்தர் இம்மட்டும் எங்களை ஆசீர்வாதமாக நடத்தி வருகிறார்.




# கண்டு பயனடையுங்கள்!

வியாபாரம் மற்றும் தொழில் செய்கிறவர்களுக்காக...

'ஜெயம் பெற்றவர்கள்!' 'இயேசு விடுவிக்கிறார்' தொலைக்காட்சி நிகழ்ச்சி!

சத்தியம் டி.வியில், ஞாயிறுதோறும் இரவு 10:30 மணிக்கு.

ஏஞ்சல் டி.வியில், வியாழன்தோறும் இரவு 11:00 மணிக்கு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனுடைய திட்டம் நிறைவேறுகிறது...

# தேவனுடைய கூடாரம்!



இந்தியாவின் எழுப்புதல் காரியத்தில், கர்த்தர் மிகவும் தீவிரமாக இருக்கிறார்! **எழுப்புதலுக்காக தீவிரமாக நாம் ஜெபிக்க வேண்டும்** என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். இதற்காகத்தான் கர்த்தர் தேவனுடைய கூடாரம் கட்டுவதற்கான இடத்தை இலவசமாக கொடுத்து, கூடாரத்தைக் கட்டி எழுப்பி வருகிறார். இப்பொழுதே தேவனுடைய கூடாரத்தில் **தினமும் உபவாசித்து, எழுப்புதலுக்காக ஜெபித்து வருகிறோம்.**

**'இந்தியாவின் ஜாமக்காரர்கள்!'** என்கிற ஜெபக் குழுவினர் **தினமும் உபவாசத்தோடு ஜெபிக்கிறார்கள்.** தேவனுடைய கூடாரம் பிரதிஷ்டை செய்யப்பட்டதும், **ஜெபக் கோபுரத்தில் 24 மணி நேரமும் இடைவிடாத ஜெபம் நடைபெற வேண்டும்** என்று, கர்த்தர் விரும்புகிறார்.

எழுப்புதல் வந்த பிறகும், அந்த எழுப்புதல் பாதுகாக்கப்பட ஜெபம் மிகவும் அவசியம். ஆகவே, இயேசு கிறிஸ்துவின் வருகை வரை இடைவிடாமல் ஜெபமும், துதியும் தேவனுடைய கூடார ஜெபக் கோபுரத்தில் ஏறெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும்! இதற்கான ஆயத்தங்களை இப்போதே செய்ய ஆரம்பித்திருக்கிறோம்!

## ₹ 30 லட்சம் மதிப்பில், சொந்த வீடு!



என் மகளுக்கு சொந்தமாக ஒரு வீடு வேண்டி, அவளுடைய பெயரில் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை காணிக்கையாகக் கொடுத்துத் தாங்கி, தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணியில் பங்கெடுத்தேன்.

கர்த்தர் என் காணிக்கையை அங்கீகரித்து, என் வேண்டுதலை கேட்டு, சுமார் ₹ 30 லட்சம் மதிப்பில் ஒரு புதிய வீட்டை சொந்தமாகக் கட்டி முடித்து, அதில் குடியேற மாபெரும் கிருபை செய்தார். - கஸ்தூரிபாய், சேரன்மகாதேவி.

கட்டுமானப் பணிகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், தேவனுடைய திட்டத்தின்படியே, தேவனுடைய கூடாரம் ஒரு ஜெபக் கேந்திரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கு வாரந்தோறும் முதியோர்களுக்கான, **'சிமியோன் ஜெபம்!'**, விதவைகளுக்கான, **'அன்னாள் ஜெபம்!'** மற்றும் **'அற்புத விடுதலைப் பிரார்த்தனை!'**, மாதந்தோறும் **'திறப்பின் வாசல் ஜெபம்!'**, **'முழு இரவு ஜெபம்!'**, **'மூத்த குடிமக்கள்** மற்றும் விதவைகளுக்கான **'சிறப்புக் கூடுகை!'**, **'மாற்றுத் திறனாளிகள் கூட்டம்!'**, **'வாலிபர் ஜெபம்!'** (Synergia!), **'சிறுவர் ஜெபம்!'** மற்றும் **'சுவிசேஷகர்கள் ஐக்கியக் கூடுகை!'**, தினந்தோறும் இந்தியாவிற்காக ஜெபிக்கிற, **'ஜாமக்காரன் ஜெபம்!'**, **'அறுவடை வேதாகமக் கல்லூரி'** போன்ற ஊழியங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மேலும், இங்கு **செயல்பட்டு வரும் வரவேற்பறைக்கு** (Reception) தினந்தோறும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் நேரடியாக வந்து ஜெபித்து, தேவ ஆலோசனைகளையும், அற்புதங்களையும் பெற்றுச் செல்கிறார்கள்.

இனி, தேவனுடைய கூடாரத்தில் ஜெபக் கோபுரத்தை கட்ட ஆரம்பிக்க இருக்கிறோம். இதற்காக **உங்கள் ஜெபம் அதிகமாகத் தேவை. தினமும் ஒரு 5 நிமிடங்கள் தேவனுடைய கூடார வேலைக்காக, ஜெபக் கோபுரத்திற்காக, கர்த்தர் தேவைகளை சந்திக்க ஜெபியுங்கள்.**

**இந்த தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்காகக் காணிக்கை அனுப்ப நீங்கள் கர்த்தரால் ஏவப்பட்டால், இங்கே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

## காணிக்கை அனுப்ப...

| | |
|---|---|
| A/c Name: | Jesus Redeems Ministries - Sri Lanka, |
| A/c No: | 7010 1000 7680 |
| Bank Name: | Hatton National Bank PLC. |
| Branch: | Nawam Mawatha - Colombo - 02. |
| Swift Code: | HBLILKLXXXX. |

'www.jesusredeems.com/donation.php' என்கிற எமது இணைய தளத்தின் மூலமாகவும் நீங்கள் காணிக்கை செலுத்தலாம். - உங்கள் சகோதரன்.

Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA. *(Ph: 011 293 0152, 071 437 1111)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"...ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்;" நீதி. 19:17

# புது வாழ்வு பல்நோக்கு மருத்துவமனை!

***(New Life Multi Speciality Hospital)***

'இயேசு விடுவிக்கிறார்' புது வாழ்வு சங்கம்–சமூக சேவைப் பிரிவு.

**கர்த்த**ருடைய கிருபையினாலும், உங்களுடைய ஜெபத்தினாலும், உதாரத்துவமான நன்கொடைகளினாலும், **நமது புது வாழ்வு பல்நோக்கு மருத்துவமனையின்** கட்டுமானப் பணிகள் தடையில்லாமல் நடைபெற்று வருகிறது.

அஸ்திபாரப் பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது **காங்கிரீட் தூண்கள்** அமைக்கிற பணிகள் நடைபெற்று வருகிறது. இப்போதும், தற்காலிகமாக நடைபெற்று வருகிற நமது இலவச மருத்துவமனை ஊழியத்தின் மூலமாக, அனேக ஏழை–எளிய மக்கள் பயன்பெற்று வருவது மட்டுமல்லாமல், இயேசு கிறிஸ்துவின் அன்பையும் அறிந்து வருகிறார்கள்.

வெகு சீக்கிரத்தில் இந்த மருத்துவமனை கட்டி முடிக்கப்பட வேண்டும். இதற்காக **ஜெபியுங்கள்.** கர்த்தருடைய இந்த உன்னதமான பணிக்காக, ஏவப்படுகிறபடி **கொடுத்துத் தாங்க உங்களை அன்போடு அழைக்கிறேன்.**

**ஒரு சதுர அடிக்கு ₹ 2,200/- செலவாகும்.**
**(மொத்த அளவு 28,000 சதுர அடி)**

மட்டுமல்ல, "மொத்தம் 216 அறைகள் கட்டப்பட வேண்டும்." என்று தெரியப்படுத்தி இருந்த காரியத்தில், தற்போது **11 அறைகளைக் கட்டிக் கொடுப்பதற்காக, சில தேவ பிள்ளைகளை கர்த்தர் எழுப்பி இருக்கிறார்.** அவர்களுக்காக கர்த்தரைத் துதிக்கிறேன்!

**இன்னும் 205 அறைகள் கட்டப்பட வேண்டும். ஒரு அறை கட்டுவதற்கு ஆகும் செலவு ₹ 3 லட்சம்.**

ஏவப்பட்டால், உங்கள் **குடும்பத்தின் சார்பாகவோ,** அல்லது **உங்கள் நிறுவனத்தின் சார்பாகவோ** ஒரு அறையைப் பொறுப்பெடுத்து கட்டிக் கொடுக்கலாம்.

**நடைபெற்றுக் கொண்டிருக்கிற மருத்துவமனைக் கட்டுமானப் பணிகள்**





**ஜெபியுங்கள்**, கர்த்தர் உங்களை **ஏவுவாரானால்**, உங்கள் நன்கொடைகளை **கீழே கொடுக்கப்பட்டுள்ள எமது வங்கிக் கணக்கில் நேரடியாகவோ**, அல்லது 'NEW LIFE SOCIETY' என்கிற பெயரில் Cheque / D.D. **மூலமாகவோ**, கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பலாம். மட்டுமல்ல, 'www.jesusredeems.com/nls_hospital.php' என்கிற எமது இணைய தளத்தின் மூலமாகவும் நன்கொடைகளை அனுப்பலாம். – **உங்கள் சகோதரன்.**

ADDRESS: **NEW LIFE SOCIETY, Main Road, Nalumavadi-628 211, Thoothukudi Dt., India.**
Ph: **890 383 5315.** Web: www.newlifesociety.in Email: info@newlifesociety.in

## கிளிநொச்சி

## இயேசு விடுவிக்கிறார்

கெத்செமனே ஜெப மையம்
GETHSEMANE PRAYER CENTRE

முகவரி: **இல. 31, உதயநகர் கிழக்கு, நாகதம்பிரான் கோவில் வீதி, கிளிநொச்சி.**
**Ph: 021 - 2285 284.**

**அலுவலக நேரம்**
**தினமும் காலை 9:00 - மாலை 7:00 மணிவரை.**

**இங்கு நடைபெறும் ஊழியங்கள்!**

| | | | | |
|---|---|---|---|---|
| **பெண்கள் ஜெபம்!** (புதன்கிழமைதோறும்) 12:00 P.M. - 3:00 P.M. | **உபவாச ஜெபம்!** (சனிக்கிழமைதோறும்) 9:00 A.M. - 12:00 Noon | **சினெர்ஜியா** வாலிபர் கூட்டம் (ஞாயிற்றுக்கிழமைதோறும்) 3:00 P.M. - 4:00 P.M. | **அற்புத விடுதலை பிரார்த்தனை!** (ஒவ்வொரு மாதமும் 2வது சனிக்கிழமை) 5:00 P.M. - 7:00 P.M. | **முழு இரவு ஜெபம்** (போயா நாளின் முந்தைய தினம்) இரவு 10:00 P.M. - காலை 5:00 A.M. |

## இலங்கை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயேசுவும், நானும்!



**என்னுடைய 40 ஆண்டு கால ஊழியப் பாதையிலும், என் தனிப்பட்ட வாழ்க்கையிலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னோடு கூட இருந்து நடத்தி வருகிற காரியங்களை, 'இயேசுவும், நானும்!' என்கிற தலைப்பில், இப்பகுதியில் வெளியிட்டு வருகிறேன். இது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்று விசுவாசிக்கிறேன்.**

கடந்த (2017) ஜுலை மாத இதழில், "நீங்கள் உங்களுடைய பாவங்களை எல்லாம் கர்த்தரிடத்தில் அறிக்கையிட்டுச் சொன்ன பிறகு, பாவ மன்னிப்பின் நிச்சயத்தை அவர் உங்களுக்குக் கொடுத்தார். அதற்குப் பிறகு, கர்த்தர் உங்களுடைய வாழ்க்கையில் எப்படி எல்லாம் இடைபட ஆரம்பித்தார்?" என்ற கேள்விக்கு நான் பதிலளிக்கும்போது கடைசியாக, "...பாவ மன்னிப்பின் நிச்சயத்தை நான் கர்த்தரிடத்தில் இருந்து பெற்றுக் கொண்ட உடனே, என்னுடைய பாவ சுபாவங்கள் எல்லாம் அப்படியே மாறி விட்டன. அதன் பிறகு, நான் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும் போதெல்லாம் வித்தியாசமாக இருந்தது. அதற்கு முன்பாகவும் நான் வேதாகமத்தை வாசித்திருக்கிறேன்! ஆனால், நான் இரட்சிக்கப்பட்டு, கர்த்தருடைய பிள்ளையாக மாறிய பிறகு வேதாகமத்தை வாசிக்கும் போதெல்லாம், வேத வசனங்களின் மூலமாக கர்த்தர் என்னோடு பேசுவதை நான் உணர்ந்தேன்." என்று நான் சொன்னதாக வாசித்து முடித்திருப்பீர்கள்.

### இதோ, அதன் தொடர்ச்சி...

என்னுடைய ஜெபம், வேத வாசிப்பு எல்லாம் வித்தியாசமாக மாறி விட்டது. முன்பு நான் ஜெபிக்கும் போதெல்லாம், இயேசு கிறிஸ்து எங்கோ இருப்பதைப் போல எனக்குத் தோன்றியது. ஆனால், "அவர் என் ஜெபத்தைக் கேட்கிறார்! நான் அவருடைய பிள்ளை! அவர் என்னுடைய தகப்பன்!" என்று, உரிமையோடு ஜெபிக்கிற ஒரு அனுபவம், அதன் பிறகுதான் எனக்கு உண்டானது. அந்த இரட்சிப்பின் சந்தோஷம் எனக்குள் உண்டானது! அந்த சந்தோஷத்தினால்தான், இயேசு கிறிஸ்துவைப் பற்றி எல்லோரிடத்திலும் நான் சொல்ல ஆரம்பித்தேன். ஆனால் அந்த சந்தோஷம், 6 மாதங்கள்தான் நிலைத்திருந்தது.

### யாருக்கெல்லாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லி இருக்கிறீர்கள்?

என்னோடு படித்தவர்களுக்கு மட்டுமல்லாமல், ஆலயத்தில், இரட்சிக்கப்படாமல் பெயர் கிறிஸ்தவர்களாக இருப்பவர்களுக்கும் கூட இந்த இரட்சிப்பின் அனுபவத்தைப் பற்றி சொல்லி இருக்கிறேன். ஆனால், எனக்குள் இந்த அனுபவம் சில மாதங்கள்தான் இருந்தது. அதன் பிறகு, எனக்குள் பெரிய ஒரு போராட்டம் வந்தது.

என் ஆவிக்குரிய வாழ்க்கையில் சில வீழ்ச்சிகள் உண்டானது. அதாவது, என்னுடைய பழைய பாவங்கள் என்னை மேற்கொள்ள ஆரம்பித்தன! எந்தப் பாவத்தை எல்லாம் நான் விட்டு விட்டேனோ, அந்தப் பாவம் எல்லாம் என்னை மேற்கொள்ள ஆரம்பித்தன!

காரணம், நாம் பாவம் நிறைந்த உலகத்தில் இருக்கிறோம்! ஆகவேதான் சோதனையான நேரங்களில் வீழ்ச்சிகள்! "நாம் இரட்சிக்கப்பட்டு விட்டோம்! கர்த்தர் நம்மோடு பேசுகிறார், உண்மைதான்! ஆனாலும், மறுபடியும் பாவத்தை செய்து விடுகிறோமே! சில சமயங்களில் கோபம் வந்து விடுகிறதே!" என்று, என் மனசாட்சி என்னை குத்தியது. "நீ ஒரு தேவனுடைய பிள்ளையாக இருந்து கொண்டு, இப்படி எல்லாம் பேசலாமா? நடக்கலாமா?" என்கிற உணர்வு எனக்குள் வந்தது.

அதன் பிறகு, "இயேசுவே, எனக்கு பரிசுத்தமான வாழ்க்கை வேண்டும்." என்று சொல்லி, என் பரிசுத்தத்திற்காக நான் அதிகமாக ஜெபிக்க ஆரம்பித்தேன். அந்த நாட்களில், ஆவிக்குரிய கூட்டங்கள் எங்கு நடந்தாலும், ஓடி போய் கலந்து கொள்வேன். "நான் இன்னும் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர வேண்டும்." என்கிற வாஞ்சை எனக்குள் அதிகமாக இருந்தது.

நான் இரட்சிக்கப்பட்டு இருந்தபடியினால், இந்தப் பாவமான காரியங்களைப் பற்றி எல்லாம் மற்றவர்களிடத்தில் சொல்வதற்கும் எனக்கு தயக்கம். காரணம், "அவர்கள் என்னை தவறாக நினைத்து விடுவார்களோ?" என்கிற ஒரு பயம். ஆகவே அதிக தாகத்தோடு, என் பரிசுத்தத்திற்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன்.

அப்படியாக நான் ஒருநாள், என் அறையில் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு தேவ வல்லமை என் மீது பலமாக இறங்கியது. அதற்கு முன்பாக நான் அப்படிப்பட்ட ஒரு காரியத்தை உணர்ந்ததே இல்லை. அந்த நேரத்தில், என் சரீரத்தில் ஏதோ ஒரு மாற்றம் உண்டாவதை என்னால் உணர முடிந்தது. அந்தப் பரிசுத்த ஆவியின் வல்லமை சில நிமிட நேரங்கள் என் மீது இருந்தது. அதன் பிறகு, எனக்குள் ஒரு பயம் வந்து விட்டது. இப்படிப்பட்ட ஒரு அனுபவத்தை, நான் அதுவரை வேறு எங்கும் பார்த்ததும் இல்லை, கேள்விப்பட்டதும் இல்லை. ஆனால், என் உள்ளத்திற்குள் ஒரு சந்தோஷம் இருந்தது. அதன் பிறகுதான், "இது கர்த்தருடைய காரியம்!" என்பதைத் தெரிந்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சமயத்தில் ஒருநாள், ஒரு சகோதரர் என்னிடத்தில் ஒரு நோட்டீஸை கொடுத்தார். அந்த நோட்டீஸில், 'சென்னையில் **முழு இரவு ஜெபம்** நடக்கிறது. அதில், 'சகோ. D.G.S. **தினகரன்,** சகோ. **ஜீவானந்தம்**, சகோ. **வேதநாயகம் சாஸ்திரியார்** போன்ற தேவ ஊழியர்கள் பிரசங்கம் பண்ண இருக்கிறார்கள்.' என்று போடப்பட்டிருந்தது.

அந்த நாட்களில் நான் இவர்களைப் பற்றி கேள்விப்பட்டதே கிடையாது. உடனே எனக்குள், "இரவு முழுவதும் இவர்கள் விழித்திருந்து ஜெபிப்பார்களா?" என்று மிகவும் ஆச்சரியப்பட்டேன். பொதுவாக, 'கிறிஸ்துமஸ்', 'ஈஸ்டர்' போன்ற நாட்களில்தான் இரவு ஜெபத்திற்குப் போவோம்.

ஆனால், "இரவு முழுவதும் ஜெபிப்பார்கள்!" என்று அறிந்தவுடன், "அந்த ஜெபத்திற்குப் போக வேண்டும்!" என்று எனக்குள் ஒரு ஆசை உண்டாயிற்று. நான் அந்த ஜெபத்திற்குப் போனபோது, திரள் கூட்ட ஜனங்கள் ஜெபிக்கும்படியாக அங்கே கூடி வந்திருந்தார்கள்! அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தை நான் அதுவரை பார்த்ததே கிடையாது. ஜெப வேளைகளில், ஆவியில் நிரம்பி அந்நிய பாஷையில் பேசினார்கள். ஆனால் நான் ஜெபிக்காமல், அங்கு நடப்பதைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். அப்பொழுது, எனக்குள் ஒரு சந்தோஷம் இருந்தது.

அங்குதான், "பரிசுத்த ஆவியானவர்தான் நாம் பரிசுத்தமாக வாழ நமக்குக் கிருபை செய்வார்! பாவத்தை மேற்கொள்ள நமக்குப் பெலன் தருவார்! அந்த அபிஷேகத்தை நாமும் பெற்றுக் கொள்ள வேண்டும்!" என்கிற வாஞ்சை எனக்குள் உண்டானது.

**அதற்கான வாஞ்சை உங்களுக்குள் உண்டான பிறகு, அந்த இரவு ஜெபத்தில் பிரசங்கிக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தையால் தொடப்பட்டு, கர்த்தர் உங்களை வழி நடத்துவார் என்பதை உங்களால் அறிந்து கொள்ள முடிந்ததா?**

ஆம். அந்த சமயத்தில் கர்த்தர் மிகவும் அற்புதமாக வழி நடத்தினார். நானும் மிகுந்த தாகத்தோடு ஜெபிக்க ஆரம்பித்தேன். எனக்கும் அந்த மாதிரியான ஒரு அனுபவம் வேண்டும் என்று ஜெபிக்கவும், அதைக் குறித்ததான அனேக தேவ செய்திகளைக் கேட்கவும் ஆரம்பித்தேன்.

அந்த நாட்களில், கல்லூரியில் படிப்பதற்காக நான் மதுரைக்குச் சென்றிருந்தேன். 1974 ஜனவரி மாதம் பொங்கல் விடுமுறை நாட்களில், தஞ்சாவூரில் **'பிளஸ்ஸோ'** (BLESSO) முகாம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தை சகோ. R. **ஸ்டான்லி** அவர்கள் பொறுப்பெடுத்து நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அதைக் கேள்விப்பட்டு, அதில் போய் கலந்து கொள்ள நான் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தபோது, என்னை ஒரு தகப்பனார் அழைத்து, "அந்தக் கூட்டத்திற்கு நீங்கள் போய் விட்டு வாருங்கள்." என்று சொல்லி, என்னை அனுப்பி வைத்தார்கள். நான் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது, அங்குள்ள ஜனங்கள் ஆவியில் நிறைந்து ஜெபிக்கிறதைப் பார்த்து, எனக்குள் இன்னும் அதிகமான தாகம் உண்டாயிற்று.

2வது நாள், "பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றுக் கொள்ள உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்." என்று அறிவிப்புக் கொடுத்தார்கள். "பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றுக் கொள்வது எப்படி?" என்கிற ஒரு புத்தகத்தையும் கொடுத்தார்கள். அந்தப் புத்தகத்தை நான் முழங்காலிலேயே நின்று வாசித்தேன். அன்று இரவெல்லாம் எனக்கு தூக்கமே வரவில்லை. "எப்பொழுது இந்த அனுபவம் எனக்குக் கிடைக்கும்?" என்கிற வேட்கை எனக்குள் அதிகமாக உண்டானது.

அடுத்த நாள் காலையில், முதல் ஆளாகப் போய் உட்கார்ந்து விட்டேன். அன்றைய தினம், சகோ. **லயனல்** அவர்கள்தான் பரிசுத்த ஆவியைக் குறித்து தேவ செய்தியைக் கொடுத்தார்கள். அவர்கள் செய்தி வேளையை முடித்து, ஜெபத்தை ஏறெடுக்கும்போது, முகாம் நடந்த அந்த இடம் முழுவதையும் ஒரு தேவ வல்லமை நிரப்பியது. பரிசுத்த ஆவியானவர் என் மீதும் ஊற்றப்பட்டு, அளவில்லாமல் என்னை நிரப்பினார்.

சுமார் 2 மணி நேரம் 'என்ன நடந்தது?' என்றே எனக்குத் தெரியாது. அப்படியாக பரிசுத்த ஆவியினால் நிரம்பி, புதிய புதிய பாஷைகளைப் பேசினேன். இப்படிப்பட்டதான ஒரு காரியம், என் ஆவிக்குரிய வாழ்க்கையில் அடுத்த ஒரு பெரிய சந்தோஷத்தைக் கொடுத்தது. அதாவது, என் ஆவியில் ஒரு களிகூருதல் உண்டானது! மிகுந்த தாகத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த அனுபவத்தை, அந்த மாதிரியான ஒரு அபிஷேகத்தை கர்த்தர் எனக்குக் கொடுத்தார்.

"நான் எங்கே இருக்கிறேன்?" என்று, சுமார் 2 மணி நேரம் கழித்த பிறகுதான் எனக்குத் தெரிந்தது. அந்த அளவிற்கு, ஆவியானவர் என்னை அளவில்லாமல் நிரப்பினார். அதன் பிறகு, என் ஆவிக்குரிய வாழ்க்கை வித்தியாசமாக மாறி விட்டது. என் ஜெபம் வித்தியாசமாகி விட்டது. வேத வசனங்களை வாசிக்கும்போது, இன்னும் அதிகமாக அதை என்னால் விளங்கிக் கொள்ள முடிந்தது. நான் இன்னும் அதிகமாக வேதாகமத்தை வாசிக்கவும், ஜெபிக்கவும் ஆரம்பித்தேன். அதன் பிறகுதான் பாவ சோதனைகளை என்னால் மேற்கொள்ள முடிந்தது. இந்த பூமியில், "நம்மாலும் ஒரு பரிசுத்தமான வாழ்க்கை வாழ முடியும்!" என்கிற நிச்சயத்தை கர்த்தர் எனக்குள் உண்டாக்கினார்.

அந்த நாட்களில்தான், கர்த்தர் என்னை ஊழியத்திற்கு அழைத்தார். நான் அபிஷேகம் பெற்றுக் கொண்ட சமயத்தில்தான், "நீ என்னுடைய ஊழியத்தைச் செய்ய வர வேண்டும். நீ கண்ணீரோடு மற்றவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். என்னைப் பற்றி மற்றவர்களுக்கு நீ சொல்ல வேண்டும்." என்று சொல்லி, மிகத் தெளிவாக கர்த்தர் என்னோடு பேசி, என்னை ஊழியத்திற்கு அழைத்தார். அது வரைக்கும் எனக்கு அதைப் பற்றிய எண்ணமே கிடையாது.

கர்த்தர் என்னோடு மிகத் தெளிவாகப் பேசியபடியினால், என்னுடைய கல்லூரிப் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டு, சென்னைக்கு வந்து, 'பாடி' என்கிற ஒரு இடத்தில் இருக்கிற ஆலயத்தில் சிறு பிள்ளைகளுக்கு மத்தியில்தான் முதன்முதலாக நான் ஊழியம் செய்ய ஆரம்பித்தேன்.

**- தொடரும்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் தேசத்தில் வரப் போகும் எழுப்புதல்!



**கடந்த** சில ஆண்டுகளாக, ஒவ்வொரு வருடமும் இஸ்ரேல் தேசத்திற்கு கர்த்தர் என்னை அழைத்துச் செல்கிறார். அங்கு போகும் போதெல்லாம், இந்தியா தேச எழுப்புதலுக்காகத்தான் அதிகமாக ஜெபிப்பேன். கெத்செமனே தோட்டத்தில் ஒருமணி நேரமாவது காத்திருந்து ஜெபிப்பதுண்டு. அந்த நேரத்திலெல்லாம் அதிகமான ஆத்தும பாரம் எனக்கு உண்டாகி, அழுது ஜெபித்திருக்கிறேன்.

சில சமயங்கள், அந்த இடத்தில் இயேசு கிறிஸ்து என்னை சந்தித்து, ஊழிய தரிசனங்களையும், திட்டங்களையும் தந்திருக்கிறார். கடந்த 2014ம் ஆண்டு, கெத்செமனே தோட்டத்தில் நான் ஜெபித்து கொண்டிருந்தபோது, இயேசு கிறிஸ்து என்னை சந்தித்தார்.

அப்பொழுது அவர், **"எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக் கொள்ளுங்கள்;..." (சங். 122:6)** என்ற வேத வசனத்தைச் சொல்லி, "உலகமெங்கும் எருசலேமின் சமாதானத்திற்காக ஜெபிக்கிறார்கள். ஆனால், எருசலேமிலுள்ள ஜனங்கள் இரட்சிக்கப்படாமல், எப்படி சமாதானம் வரும்? ஆகவே, இஸ்ரவேல் மக்கள் இரட்சிக்கப்பட, நீ ஜெபிக்க வேண்டும்! நீ ஒரு கூட்டம் மக்களை அழைத்து வந்து, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவும், இந்த தேசத்தில் எழுப்புதல் உண்டாகவும் உபவாசித்து ஜெபிக்க வேண்டும்." என்று திருவுளம் பற்றினார்.

"எப்படி இதைச் செய்ய வேண்டும்? ஆண்டவரே!" என்று நான் கேட்டபோது, அதற்கான ஆலோசனைகளையும் கர்த்தர் எனக்குக் கொடுத்தார். "ஜெபிக்கிற மக்களை நானே கூட்டிச் சேர்ப்பேன்." என்று வாக்குக் கொடுத்தார். அதன்படி, முதன் முதலாக கடந்த 2016ம் ஆண்டு, **இஸ்ரேல் தேச எழுப்புதல் ஜெப யாத்திரைக்கு, 9 நாடுகளிலிருந்து 466 பேரை** கர்த்தர் கூட்டிச் சேர்த்தார்.

**எருசலேமில் 12 மணி நேர உபவாச ஜெபம், பெத்லகேமில் 9 மணி நேர உபவாச ஜெபம், கர்மேல் மலையில், கலிலேயா கடற்கரையில், கெத்செமனே தோட்டத்தில்,** இயேசு கிறிஸ்து **உயிர்த்தெழுந்த இடத்தில்**...என்று, **விசேஷித்த ஜெப நேரங்களை** கர்த்தர் கொடுத்தார்.

இந்த ஜெப நேரங்களில், கர்த்தருடைய தீர்க்கதரிசி, அன்பு சகோதரர் **வின்சென்ட் செல்வக்குமார்** அவர்கள் மூலமாக, இஸ்ரேல் தேசத்தில் வரப் போகிற எழுப்புதல் மற்றும் யூத மக்களின் இரட்சிப்பைக் குறித்து ஆவியானவர் தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்திச் சொன்னார். அப்பொழுது கர்த்தருடைய இருதயத்தில் இருக்கிற பாரத்தை அறிந்தபோது, மிகுந்த கண்ணீரோடும், ஆவியோடும் ஜெபித்தோம்.

**"...இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்." (ரோமர் 11:26)** என்று, பரி. பவுல் மூலமாக ஆவியானவர் வெளிப்படுத்தி இருக்கிற



எருசலேமில் 12 மணி நேர உபவாச ஜெபம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கர்மேல் மலை சிகரத்தில் ஆயத்த ஜெபம்

தீர்க்கதரிசனத்தை கர்த்தர் காண்பித்து, அதற்காக ஜெபிக்க வைத்தார். மேலும், இஸ்ரவேலரின் இரட்சிப்பிற்காக தொடர்ந்து ஜெபிக்க, ஜெபக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, ஜெபித்து வருகிறோம்.

இந்த வருடமும் கடந்த (2017) மே மாதத்தில், **13 நாடுகளிலிருந்து 470 பேரை** கர்த்தர் ஜெபிக்கக் கொண்டு வந்தார். கர்மேல் மலை சிகரத்தில் கூடி ஆயத்த ஜெபம் செய்தபோதே, ஆவியானவர் பலமாய் ஊற்றப்பட்டார். கலிலேயா கடற்கரையில் அமர்ந்து தேவ சமூகத்தில் காத்திருந்தபோது, அன்பு சகோதரர் வின்செண்ட் செல்வகுமார் அவர்கள், "இஸ்ரவேலர்கள் அனைவரும் எப்படி இரட்சிக்கப்படப் போகிறார்கள்?" என்பதைப் பற்றி வேத வசனத்தின் வெளிச்சத்தில் விளக்கிக் கூறியபோது, இஸ்ரவேலரின் இரட்சிப்பிற்காக அதிக பாரத்தோடு ஜெபித்தோம். அப்பொழுது, சகோதரர் அவர்கள் மூலமாக தீர்க்கதரிசன வார்த்தைகள் வெளிப்பட்டது.

**எருசலேமில் 12 மணி நேர உபவாச ஜெபம்** (காலை 8:00 - இரவு 8:00) நடைபெற்ற போதும், கர்த்தர் தீர்க்கதரிசனமாக இஸ்ரேல் தேசத்தின் எழுப்புதலைக் குறித்துப் பேசினார். கர்த்தர் வெளிப்படுத்திய அத்தனை காரியங்களையும் வைத்து, கருத்தாக ஜெபித்தோம்.

**பெத்லகேமில் அபிஷேக ஜெபம்** (Anointing Prayer) செய்தபோது, ஆவியானவர் அளவில்லாமல் ஊற்றப்பட்டார். அனேகர் ஆவிக்குள்ளாக்கப் பட்டார்கள். **கெத்செமனே தோட்டத்தில்**, விசேஷ அனுமதி வாங்கி, **2 மணி நேரம்** ஜெபிக்க கர்த்தர் கிருபை செய்தார். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த இடத்தில், **திருவிருந்து ஆராதனையும்** நடைபெற்றது.



கெத்செமனே தோட்டத்தில் தனி ஜெப நேரம்

இஸ்ரேல் தேசத்தில் வரப் போகிற எழுப்புதலைக் குறித்த தெளிவும், விசுவாசமும் எல்லோருக்குள்ளும் உண்டானது. மட்டுமல்ல, ஜெபிக்க வந்திருந்த யாவரும், அந்த தேசத்திலுள்ள முக்கியமான எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்து, மகிழ்ச்சியோடு திரும்பினார்கள்.

ஆவியானவரின் வழி நடத்துதலின்படி, **இந்த வருடம் (2017) வருகிற நவம்பர் மாதத்தில், எருசலேமில் 7 நாட்கள் தங்கியிருந்து, உபவாசித்து ஜெபிக்க இருக்கிறோம்.** இந்த முறை, அங்குள்ள இடங்கள் எதையும் சுற்றிப் பார்க்காமல், 7 நாட்களும் உபவாசித்து, எருசலேமில் கர்த்தர் காண்பிக்கிற இடங்களில் எல்லாம் ஜெபிக்க இருக்கிறோம். இந்த ஜெபத்திற்கு, **ஏற்கெனவே 60 பேர் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டார்கள்.** இதற்கு மேல் அனுமதி இல்லை.



கெத்செமனே தோட்டத்தில் ஜெபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலிலேயா கடற்கரையில் சிறப்பு ஜெபக் கூடுகை

கலிலேயா கடற்கரையில் நடைபெற்ற சிறப்பு ஜெபக் கூடுகையில் நமது சகோதரர் மற்றும் சகோதரர் வின்சென்ட் செல்வக்குமார் ஆகியோரின் தேவ செய்திகளை சகோதரர் ஜோசப் மனோகரன் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்கள். ➡







கர்மேல் பர்வதத்திலுள்ள 'சுகாஹிராஸ்' என்ற சபையின் போதகர் அவர்களின் குடும்பத்தாரோடு



'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்தில் 'NEW MEDIA' என்கிற ஒரு ஊழியப் பிரிவை, இஸ்ரேல் தேசத்திலுள்ள Tel Aviv என்கிற ஒரு இடத்தில் வைத்து சகோ. வின்சென்ட் செல்வக்குமார் அவர்கள் ஜெபித்து ஆரம்பித்து வைத்தார்கள்.

இஸ்ரேல் தேச எழுப்புதல் ஜெப யாத்திரையில் பங்கு பெற்ற தேவ பிள்ளைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தருக்குச் சித்தமானால், வருகிற **2018ம்** வருடம் **மே** மாதத்தில், மறுபடியும் **3வது எழுப்புதல் ஜெப சுற்றுலா** (Revival Prayer Tour) ஒழுங்கு செய்திருக்கிறோம். **எருசலேமில் 12 மணி நேர** உபவாச ஜெபம், **கர்மேல் மலையில், கலிலேயா கடற்கரையில், கெத்செமனே தோட்டத்தில்,** இயேசு கிறிஸ்து **உயிர்த்தெழுந்த இடத்தில்** என்று, **விசேஷித்த ஜெப நேரங்கள்** ஒழுங்கு செய்திருக்கிறோம். மட்டுமல்ல, அதோடு கூட **பார்க்க வேண்டிய எல்லா இடங்களையும் காண்பிக்கவும்** ஏற்பாடு செய்திருக்கிறோம்.

வருகிற 2018ம் வருட எழுப்புதல் ஜெப சுற்றுலாவில் பங்கு பெற, இப்பொழுதே பலர் பெயர்களை பதிவு செய்து வருகிறார்கள். நீங்களும் இஸ்ரவேலரின் இரட்சிப்பிற்காக ஜெபிக்க ஏவப்பட்டால், இந்த எழுப்புதல் ஜெப சுற்றுலாவில் பங்கு பெறலாம். இப்பொழுதே **உங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.**

இஸ்ரேல் மக்களின் இரட்சிப்பிற்காக, தனித்தோ, அல்லது ஜெபக் குழுவில் கூடி ஜெபிக்க ஏவப்பட்டாலோ, கீழ்கண்ட முகவரியில் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அதற்கான ஜெபக் குறிப்புகளை உங்களுக்கு அனுப்பி வைப்போம்.

## நீங்களும் உதவலாம்!

இஸ்ரேல் மக்களுக்காக ஜெபிப்பது மாத்திரமல்ல, பல தேசங்களிலிருந்து இஸ்ரேலுக்குத் திரும்பி வருகிற, கஷ்டப்படுகிற யூத மக்களுக்கு உதவி செய்யவும், கர்த்தருக்குள் தீர்மானித்தோம். அந்தக் **குடும்பங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக்** கொடுக்கவும், **யூதக் குழந்தைகளைப் படிக்க வைக்கவும்** உதவி செய்ய ஆரம்பித்திருக்கிறோம்.





முதல் கட்டமாக, ஒவ்வொரு குடும்பத்திற்கும் 200 $ (₹ 14,000/-) மதிப்பில், **112 யூதக் குடும்பங்களுக்கு** பொருட்களை வாங்கிக் கொடுக்க, கர்த்தர் உதவி செய்தார். கர்மீல் பட்டணத்தில் உள்ள பல யூதக் குடும்பங்களைச் சந்தித்து, அவர்களுக்கு உதவி செய்ய கர்த்தர் கிருபை பாராட்டினார். அந்தப் பட்டணத்தின் துணை மேயர் இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்று, நாம் செய்த உதவிகளுக்காக நன்றி கூறினார்கள்.



கர்மீல் துணை மேயர் அவர்கள் நன்றி கூறியபோது...

ஒரு யூதக் குழந்தையை படிக்க வைக்க, வருடத்திற்கு 400 $ (₹ 28,000/-) என்று, **30 யூதக் குழந்தைகளைப் படிக்க வைக்க,** Jewish Agency அமைப்பினரின் மூலமாக **உதவித் தொகையை** வழங்க கர்த்தர் கிருபை செய்தார்.



நீங்களும் இந்த யூதக் குடும்பங்களுக்கு, அல்லது அவர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைக்க **முன் வரலாம். ஒரு வருடத்திற்கு, ஒரு யூதக் குழந்தையைப் படிக்க வைக்க உதவி செய்யலாம்.** பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும்!

இதற்கு உதவி செய்ய விரும்புகிறவர்கள், **'Jesus Redeems'** என்கிற பெயரில் உள்ள எமது **வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி விடாமல்,** கீழ்கண்ட **தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து கொள்ளவும்.**

– உங்கள் சகோதரன்.

மேலும் விபரங்களுக்கு: Israel Revival Prayer,
'Jesus Redeems', Nalumavadi-628211, Thoothukudi Dt., India.
Ph: +91 88077 11111, +91 8300 186000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலுமாவடி-திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!

# உங்களுக்கு நன்மை நடக்கப் போகிறது!



"கர்த்தர் நன்மையானதைத் தருவார்;" சங்கீதம் 85:12. உங்களுக்குத்தான் நன்மை உண்டாகப் போகிறது! ஆனால், நீங்கள் இயேசு கிறிஸ்துவிடம் வேண்டிக் கொள்ளும் போதுதான், நன்மை உண்டாகும்! உங்களோடு சேர்ந்து உங்களுக்காக வேண்டுதல் செய்ய, திறப்பின் வாசல் ஜெபத்தை கர்த்தர் ஏற்படுத்தி இருக்கிறார். கடந்த நாட்களில் வேண்டுதலைக் கேட்டு, கர்த்தர் செய்த நன்மைகளைப் பாருங்கள்:

## 10 வருட, வேதனை நீங்கியது!



நான் ஓட்டுனராக பணி புரிகிறேன். அதன் நிமித்தமாக, என்னுடைய 2 தோள்பட்டைகளிலும் இருந்த **வலியினால் 10 வருடங்களாக வேதனைப்பட்டேன்.**

கைகளை **தூக்க முடியாது.** சரியாகப் படுத்துத் **தூங்கவும் முடியாமல்** மிகவும் கஷ்டப்பட்டேன்.

என் உறவினர்தான் என்னை திறப்பின் வாசல் ஜெபத்திற்குக் கூட்டிக் கொண்டு வந்தார்கள். ஜெப வேளையில், கர்த்தர் அந்த **வலியை** முற்றிலுமாக **மறையச் செய்தார். - கன்னியப்பன், திருப்பூர்.**

## அற்புத சுகம் கொடுத்தார்!



**சர்க்கரை வியாதியினாலும்**, உயர் **இரத்த அழுத்தத்தினாலும்**, 8 வருடங்களாக **வேதனைப்பட்டேன்.** ஜெப வேளையில், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்.

கர்த்தர் மிக அற்புதமான சுகத்தை எனக்குக் கொடுத்தார். அந்த நாள் முதல், எல்லா **இனிப்பு** வகைகளையும் **சாப்பிடுகிறேன்.** இதுவரை எனக்கு **எந்தப் பிரச்சனையும் இல்லை. - லில்லி, மூணார்.**

## பாவங்களை மன்னித்தார்!



என் வாழ்க்கை **அனேகப் பாவங்கள்** நிறைந்ததாக இருந்தது. **பாவங்களை விட முடியாமல், உள்ளத்தில் சமாதானம் இல்லாமல்** தவித்தேன். ஜெப வேளையில், பாவ மன்னிப்பிற்காக மிகுந்த கண்ணீரோடு இயேசு கிறிஸ்துவை நோக்கிக் கூப்பிட்டேன்.

அப்பொழுது அவர் **பிரத்தியட்சமாக** என் கண்களுக்கு முன்பாகத் **தோன்றி**, என்னைத் தொட்டு, என் பாவங்களை எல்லாம் **மன்னித்து விட்டதாகச்** சொன்னார். அந்நேரமே என் **பாவ பாரமெல்லாம் விலகியது.** இப்பொழுது மிகுந்த **சமாதானமாகவும், சந்தோஷமாகவும்** இருக்கிறேன். **- பாலமுருகன், விழுப்புரம்.**

## 10 வருட, கட்டி மறைந்தது!



சுமார் **10 வருடங்களுக்கும் மேலாக**, என் வலது கை **நரம்பிற்குள்** இருந்த ஒரு **கட்டியின்** நிமித்தமாக, பயங்கரமான **வலி** இருந்தது. மட்டுமல்ல, நான் ஒரு விபத்தில் சிக்கி, என் **இடது கை** பாதிக்கப்பட்டு, **தூக்க முடியாமல் வேதனைப்பட்டேன்.**

ஜெப வேளையில், கர்த்தர் என்னைத் தொட்டு, அந்தக் **கட்டியை மறையச் செய்து**, கையையும் **சுகப்படுத்தி**, நன்றாக **செயல்படுத்தவும்** கிருபை செய்தார். **- வளர்மதி, கரூர்.**

## வல்லமை தொட்டு, அற்புத சுகம்!



என்னுடைய **கர்ப்பப் பையில்** இருந்த ஒரு **பிரச்சனையினால், 5 முறை கருச் சிதைவு** ஏற்பட்டது.

வயிற்றின் வலது பக்கம் எப்பொழுதும் ஒரு **வலி** இருந்து கொண்டே இருந்தது. ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என் மீது பலமாக இறங்கியது. அப்பொழுது **வலி மறைந்து**, நல்ல **சுகத்தை**யும் பெற்றுக் கொண்டேன். **- ரூஷா, பத்தனம்திட்டா.**

## வேதனைகளை நீக்கினார்!



தீராத **தலை வலியினால் 3 வருடங்களாக வேதனைப்பட்டேன். அடிக்கடி மாத்திரை** போடுவேன்.

வாசிக்க முடியாதபடி கண் **பார்வையும் தெளிவில்லாமல்** இருந்தது. ஜெப வேளையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தருடைய வல்லமை என் மீது இறங்கியபோது, தலை வலியிலிருந்து **நிரந்தரமான விடுதலை** உண்டானது. **தெளிவான பார்வையும்** கிடைத்தது. **- ராணி, அரியலூர்.**

## ஆபரேஷனில்லாமல் சுகம்!



என் இடது காலில் இருந்த **மூட்டு வலியின்** நிமித்தமாக, ஆபரேஷன் செய்யப்பட்டு இருந்தது. வலது காலிலும் மூட்டு வலி உண்டானது. டாக்டர்கள், "அந்தக் காலிலும் ஆபரேஷன் பண்ண வேண்டும்." என்றார்கள்.

ஜெப வேளையில், விசுவாசத்தோடு ஜெபித்தேன். அப்பொழுது கர்த்தருடைய வல்லமை என்னைத் தொட்டு, **சுகத்தைக் கொடுத்தது. - ராஜ மாணிக்கம், திருப்பூர்.**

## 11 வருட, பார்வை கோளாறு சரியானது!



**தூரப் பார்வைக் கோளாறினால்** சுமார் 11 வருடங்களாக கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், சகோதரர் அவர்கள் கேட்டுக் கொண்டபடியே, என் கண்களில் கைகளை வைத்து ஜெபித்தேன். அப்பொழுது தேவனுடைய வல்லமை என் மீது இறங்கியதை உணர்ந்தேன்.

அந்த வினாடியே **தூரப் பார்வைக் கோளாறு சரியாகி,** பார்வை தெளிவானது. **- ஜெபக் குமாரி,** புளியம்பட்டி.

## பெயர் சொல்லி அழைத்து, சுகம்!

நான் கட்டிலில் இருந்து **கீழே விழுந்ததின் நிமித்தமாக, இடுப்பு மற்றும் தண்டுவடப் பகுதிகள்** அதிகமாகப் பாதிக்கப்பட்டு, உட்காரவோ, முழங்கால் போட்டு ஜெபிக்கவோ முடியாமல், 3 வருடங்களாக வேதனைப்பட்டேன்.



ஜெப வேளையில், நமது சகோதரர் அவர்கள் ஆவியானவரின் ஏவுதலினால் என் **பெயரைச் சொல்லி அழைத்து,** என் பிரச்சனையையும் வெளிப்படுத்தி, 'இப்பொழுதே கர்த்தரிடத்தில் இருந்து சுகத்தைப் பெறுகிறீர்கள்!' என்று சொன்னார்கள்.

அந்நேரமே, எல்லா வேதனைகளும் மறைந்து, **நல்ல சுகம் கிடைத்தது. - சுகுமார், சென்னை.**

## புற்று நோயிலிருந்து அற்புத சுகம்!

கடந்த 2016 அக்டோபரில், எனக்கு **'எலும்பில் புற்று நோய்!'** என்றும், 'அது **4th stage**' என்றும் டாக்டர்கள் உறுதிப்படுத்திச் சொல்லி விட்டார்கள்.



திறப்பின் வாசல் ஜெபத்தில் என் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லி, என் சுகத்திற்காக ஜெபித்தார்கள். அன்றைய தினமே என் சரீரத்தில் ஒரு மாற்றத்தை உணர்ந்தேன். அதை நான் டாக்டரிடத்திலும் சொன்னேன்.

கடைசியாகப் பரிசோதித்துப் பார்த்தபோது, "புற்றுநோய் இருந்ததற்கான **எந்த விதமான அறிகுறியும் இல்லையே!"** என்று டாக்டர்களே மிகவும் ஆச்சரியப்பட்டுச் சொல்லும்படியாகக் கர்த்தர் **அற்புதம் செய்தார். - பால் ஆபிரகாம், மன்னார்புரம்.**

## கட்டியை மறையச் செய்தார்!



என் கழுத்தின் பின் பக்கத்தில் இருந்த ஒரு **கட்டியினால், 6 மாதங்களாக வேதனைப்பட்டேன்.**

ஜெப வேளையில், கர்த்தருடைய கரம் என்னைத் தொட்டு, அந்தக் **கட்டியை மறையப் பண்ணிற்று.**

**- ஞானதாஸ்,** பாளையங்கோட்டை.

**இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார்! உங்கள் காரியம் எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்தை கடிதத்தில் எழுதி, பின்கோடுடன் கூடிய உங்கள் தெளிவான முகவரியோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம். நீங்களும் இந்த நாளில் உபவாசித்து, விசுவாசத்தோடு ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்கும் அற்புதம் செய்து, உங்கள் துக்கத்தை மாற்றுவார். திறப்பின் வாசல் ஜெப தினத்தன்று, காலை 9:00 - மாலை 3:00 மணிவரை ஜெபிப்போம். நீங்களும் இதே நேரத்தில் எங்கிருந்தாலும் ஜெபியுங்கள். ஜெபத்தில் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.**

- உங்கள் சகோதரன்.

Address: Standing in the Gap Prayer, Nalumavadi-628 211, Thoothukudi Dist., India.

நாலுமாவடி திறப்பின் வாசல் ஜெபம்!

**உங்கள் அற்புதத்தின் நாள்: 2017**

**ஆகஸ்ட் 26**

(கடைசி சனிக்கிழமை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் விழுந்த எழுப்புதல் அக்கினி!



**கடந்த 2007ம் வருடம் முதல், தொடர்ந்து இலங்கை தேசத்திற்குச் சென்று, ஊழியங்களை நிறைவேற்றி வருகிறோம். இதன் மூலமாக, கர்த்தர் அந்த தேசத்தில் ஆசீர்வாதமான அனேக மாற்றங்களை கட்டளையிட்டு வருகிறார்.**

இந்த வருடமும், கடந்த (2017) ஜூன் 1 முதல், 11ம் தேதிவரை, அந்த தேசத்தில் ஊழியங்களை நிறைவேற்றும்படியாக குழுவாகக் கடந்து சென்றோம். ஜூன் 1,2,3 தேதிகளில், **மட்டக்களப்பில்** நடைபெற்ற 3 நாட்கள் **திறப்பின் வாசல் உபவாச ஜெபத்திற்கு**, சுமார் **7,000**க்கும் அதிகமான தேவ பிள்ளைகள் ஜெபிக்கக் கூடி வந்திருந்தார்கள்.

நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்**, சகோ. **ஜாண் பாலக்குமார்** ('நம்பிக்கையின் வாசல் ஊழியங்கள்–கனடா), சகோ. **அகஸ்டின் ராஜசேகர்** (மன்றாட்டு ஜெப ஊழியம்–முதலூர்) மற்றும் சகோ. **S. சாம் ஜெபராஜ்** ஆகிய தேவ ஊழியர்கள் தேவ செய்தியளித்து, ஜெபத்தில் வழி நடத்தியபொழுது, கர்த்தர் தமது ஜெப ஆவியை அளவில்லாமல் ஊற்றினார். மட்டுமல்ல, இனி அந்த தேசத்தில் நடைபெறப் போகிற காரியங்களைக் குறித்தும் கர்த்தர் வெளிப்படுத்தினார்.




மட்டக்களப்பு திறப்பின் வாசல் உபவாச ஜெபத்தில் பங்கு பெற்ற தேவ ஊழியர்கள்



சகோ. ஜாண் பாலக்குமார்



சகோ. S. சாம் ஜெபராஜ்



சகோ. அகஸ்டின் ராஜசேகர்



ஆராதனை வேளை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து, **'மாங்கேணி'** என்கிற இடத்தில், 2 நாட்கள் **விடுதலைப் பெருவிழா** நடைபெற்றது. நமது சகோதரர் மற்றும் சகோ. ஜாண் பாலக்குமார் ஆகியோர் தேவ செய்தியளித்து ஜெபித்தபோது, பலத்த அற்புத-அடையாளங்களோடு கர்த்தர் தமது வசனத்தை உறுதிப்படுத்தினார்.



அதைத் தொடர்ந்து 8ம் தேதியன்று, சிங்கள மக்கள் அதிகமாக வசிக்கும், **'பொலனருவ'** என்கிற இடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த, **ஒரு நாள் உபவாச ஜெபத்திற்கு**, சுமார் **1,000**திற்கும் அதிகமான ஜனங்கள் ஜெபிக்கக் கூடி வந்திருந்தார்கள். அதில் நமது சகோதரர் அவர்கள் தேவ செய்தியளித்து, ஜெபத்தை ஏறெடுத்தார்கள்.

**'பொலனருவ' – உபவாச ஜெபம்**



கடைசியாக, 9,10,11 தேதிகளில், **'மன்னார்'** என்கிற பட்டணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த **விடுதலைப் பெருவிழாவை**, கர்த்தர் அபரிமிதமாக ஆசீர்வதித்தார். ஒவ்வொரு நாளும் திரள் கூட்ட மக்களை கர்த்தர் கூட்டிச் சேர்த்தார். ஏராளமான கிறிஸ்தவரல்லாத மக்களும் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

இதில் நமது சகோதரரும், சகோ. ஜாண் பாலக்குமார் அவர்களும் தேவ செய்தியளித்து, ஜனங்களின் விடுதலைக்காக ஜெபித்தார்கள். ஒவ்வொரு நாளும் கர்த்தர் பலத்த அற்புதங்களைச் செய்து, தமது நாமத்தை மகிமைப்படுத்தினார். விசேஷமாக, வாலிபர்கள் மீது கர்த்தர் தமது ஆவியை பலமாய் ஊற்றினார்.

**'மன்னார்' – விடுதலைப் பெருவிழா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊழியங்களை சிறப்பாக ஏற்பாடு செய்த தேவ மனிதர்கள்:**



Pr. குகன்
(மட்டக்களப்பு)



Pr. ஶ்ரீகாந்த்
(மாங்கேணி)



Pr. சாந்த
(பொலனருவ)

பிரியமானவர்களே, இந்த இலங்கை தேச ஊழியங்களுக்காக, உதாரத்துவமாகக் கொடுத்தீர்கள், ஜெபித்தீர்கள். உங்கள் தியாகமான பிரயாசத்திற்கேற்ற பலனை, கர்த்தர் நிச்சயமாக உங்கள் வாழ்க்கையில் கட்டளையிடுவார் என்பதில் சந்தேகமே இல்லை.

வருகிற **2018 ஜூன்** மாதத்தில், **இலங்கை தேசம் முழுவதும் 21 நாட்கள் 'ஜெப யாத்திரை'** செய்ய ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை தேசத்தின் எழுப்புதலுக்காக **ஜெபித்துக் கொள்ளுங்கள்.** – ஒருங்கிணைப்பாளர்.


இலங்கையில்

இயேசு விடுவிக்கிறார்

**கெத்செமனே ஜெப மையம் மற்றும் கிளை அலுவலகங்கள்!**

**வத்தளையில்**

*57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA. (Ph: 011 293 0152)*

**கிளிநொச்சியில்**

**இல. 31, உதயநகர் கிழக்கு, நாகதம்பிரான் கோவில் வீதி, கிளிநொச்சி. (Ph: 021 - 2285 284).**

- சிக்கலான சூழ்நிலைக்கு சிறந்த ஆலோசனைகள்!
- பிரச்சனைகளுக்கு விசேஷித்த பிரார்த்தனைகள்!
- 'இயேசு விடுவிக்கிறார்' அனைத்து வெளியீடுகளும் கிடைக்கும்!

**காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...**

**A/C Name: Jesus Redeems Ministries - Sri Lanka, A/C No. 7010 1000 7680.**

**Bank: Hatton National Bank PLC. Branch: Nawam Mawatha - Colombo-02. Swift Code: HBLILKLXXXX.**


# இலங்கை தேச ஊழியங்களில், இயேசு செய்த அற்புதங்களில் சில...

## புற்று நோய் கட்டி மறைந்தது!



என் வலது பக்க **மார்பில் புற்று நோய் கட்டி** இருந்தது. **அடிக்கடி இரத்த வாந்தி** எடுத்த நிலையில், **படுத்த படுக்கையாகி விட்டேன்.** டாக்டர்கள், "உடனே ஆபரேஷன் செய்ய வேண்டும்." என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு மனமில்லை. ஜெப வேளையில், நமது சகோதரர் அவர்கள் கேட்டுக் கொண்டபடியே, கட்டி இருந்த பகுதியில் என் அத்தை கை வைத்து ஜெபித்தார்கள். அப்பொழுது கர்த்தர் அந்தக் **கட்டியை மறையச் செய்தார். – தர்ஷிணி, காயங்கேணி.**

## 14 வருட, வேதனையிலிருந்து விடுதலை!

என் சரீரத்தில் இருந்த **பல விதமான பிரச்சனைகளினால், 14 வருடங்களாக வேதனைப்பட்டேன்.** கொஞ்ச நேரம் கூட **நடக்கவோ, நிற்கவோ முடியாது.** "இன்னும் கொஞ்ச நாட்கள்தான் நீங்கள் உயிரோடு இருப்பீர்கள்." என்று சொல்லி, டாக்டர்கள் என்னைக் **கைவிட்டார்கள்.** ஜெப வேளையில், எனக்குள் ஏதோவொரு மாற்றம் உண்டானதை உணர முடிந்தது. அந்நேரமே எல்லாப் பிரச்சனைகளும் மாறி, எனக்குப் **பூரண சுகம் உண்டானது. – சரேந்தினி.**



## 13 வருட, அசுத்த ஆவி வெளியேறியது!



**அசுத்த ஆவியின்** தாக்கத்தினால், சுமார் **13 வருடங்களாக** என் வயிற்றுப் பகுதியில் பயங்கரமான **ஊரல்** காணப்பட்டது. எங்கெல்லாமோ சென்று பார்த்தும், சுகம் கிடைக்கவில்லை.

ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என்னை ஆட்கொண்டபோது, **அந்த ஆவி** வெளியேறிப் போனது. **ஊரலும் மறைந்து போனது. – பத்மாவதி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருட்டுக் கண்ணை திறந்தார்!



என் வலது கண் திடீரென்று முற்றிலுமாக பார்வையை இழந்து போனதினால், 5 வருடங்களாக கஷ்டப்பட்டேன். டாக்டர்கள், "இந்தக் கண்ணை இனி ஒன்றும் செய்ய முடியாது." என்று சொல்லி விட்டார்கள். ஜெப வேளையில், கர்த்தருடைய கரம் என் கண்ணைத் தொட்டு, தெளிவான பார்வையைக் கொடுத்தது. - தங்க ரத்தினம், சாந்திபுரம்.

## வெளிப்படுத்தி, சுகம் தந்தார்!



என் குழந்தைக்கு திடீரென்று வாயிலிருந்து இரத்தமாக வந்தது. டாக்டர்கள், "இருதயத்தில் பிரச்சனை இருக்கிறது. இரத்தமும் போதுமான அளவு இல்லை." என்று சொல்லி விட்டார்கள். ஜெப வேளையில், நமது சகோதரர் அவர்கள் ஆவியானவரின் ஏவுதலினால், "ஒரு அம்மா, தன் குழந்தையின் இருதயத்திலுள்ள பிரச்சனைக்காக ஜெபிக்கிறார்கள். கர்த்தர் அந்தக் குழந்தையின் இருதயத்தைத் தொட்டு சுகமாக்குகிறார்..." என்று சொல்லி ஜெபித்தார்கள். கர்த்தர் என் குழந்தைக்கு நல்ல சுகத்தைக் கொடுத்தார். - சசிகலா.

## தற்கொலை ஆவி விலகியது!



நான் ஒரு தற்கொலை ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தேன். ஒரு சின்னப் பிரச்சனை வந்தாலும், உடனே தற்கொலைக்கு முயல்வேன். ஜெப வேளையில் தேவ பிரசன்னம் என்னை நிரப்பியபோது, அந்த ஆவி என்னை விட்டு வெளியேறிப் போனதை என்னால் உணர முடிந்தது. அந்நேரம் முதல், விடுதலையோடு இருக்கிறேன். - ஜெயராணி.



## 15 வருட, கட்டி மறைந்தது!

என் வயிற்றுப் பகுதியில், சுமார் 15 வருடங்களாக ஒரு கட்டி இருந்தது. எப்போதும் காந்தல் இருக்கும். ஜெப வேளையில், கர்த்தர் அந்தக் கட்டியை மறையப் பண்ணினார். - நாகமுத்து.



## 16 வருடத்திற்குப் பிறகு விடுதலை!

சுமார் 16 வருடங்களாக ஒரு பெலவீனப்படுத்துகிற ஆவியினால் மிகவும் பாதிக்கப்பட்டேன். ஜெப வேளையில், அந்த ஆவி என்னை அலைக்கழித்து வெளியேறிப் போனது. இப்போது நல்ல விடுதலையோடு இருக்கிறேன். - விக்டோரியா.

## பில்லி-சூனிய வல்லமை அழிந்தது



பில்லி-சூனியக் கட்டினால் பாதிக்கப்பட்டு, 3 வருடங்களாக வேதனைப்பட்டேன். ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என்னை ஆட்கொண்டபோது, பில்லி-சூனியக் கட்டிலிருந்து கர்த்தர் எனக்கு நல்ல விடுதலையைக் கொடுத்தார்.
- வசந்தி, திருகோணமலை.

## கண்களில் அற்புதம்!



சிறு வயதிலிருந்தே என் கண்களில் எப்பொழுதும் நீர் வடிந்து கொண்டே இருக்கும். எதையும் வாசிக்க முடியாது. ஜெப வேளையில், கண்களின் கை வைத்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, அற்புதமான சுகத்தைக் கொடுத்தார்.
- தயாளினி.

## 30 வருட, வேதனை மாறியது!



என் வலது கால் பாதத்தில், சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக இருந்த வேதனையினால் மிகவும் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என்னை பலமாக ஆட்கொண்டபோது, அந்த வலி முற்றிலுமாக மறைந்து போனது.
- பாலசுந்தரம்.

## 20 வருட, குடல் புண் சுகமானது!



சுமார் 20 வருடங்களாக குடல் புண்ணினால் வேதனைப்பட்டேன். மருத்துவத்தால் எனக்கு சுகம் கிடைக்கவில்லை. ஜெப வேளையில், ஒரு ஒளியைப் போல தேவனுடைய வல்லமை என் மீது விழுந்தது. அப்பொழுது 20 வருட வேதனையை கர்த்தர் மாற்றி, நல்ல சுகத்தைக் கொடுத்தார். - மேரி.

## ஊன்று கோல் உதவியின்றி...!



என் கால்களில் இருந்த பாதிப்பினால் நடக்க முடியாமல், 7 வருடங்களாக ஊன்றுகோல் உதவியுடன்தான் நடந்து கொண்டிருந்தேன். ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என் கால்களில் இறங்கியதை உணர்ந்தேன். அதற்குப் பிறகு ஊன்றுகோல் உதவி இல்லாமல் என்னால் நன்றாக நடக்க முடிகிறது.
- விஜயகுமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பகுதி!

# புத்தியுள்ள ஸ்திரீ!



சிறப்புச் செய்தி:

சகோதரி ஜாய்ஸ் லாசரஸ்.

கடந்த (2017) ஜூலை மாத இதழில், "அதாவது, 'மனைவிகளுக்கு', 'பிள்ளைகளுக்கு', 'புருஷர்களுக்கு' என்று சொல்லி, தனித்தனியாக பரிசுத்த வேதாகமத்தின் மூலமாக கர்த்தர் அனேகக் கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார்." என்பதாக வாசித்து முடித்திருப்பீர்கள்.

தொடர்ந்து வாசியுங்கள்...

முதலாவது, "**மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்.**" (கொலோ. 3:18) என்று கர்த்தர் சொல்கிறார். .

அடுத்ததாக, "**புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்.**" (கொலோ. 3:19) என்று, திருமணமான புருஷன்மார்களுக்கு ஆலோசனையாக சொல்லப்பட்டிருக்கிறது.

குடும்பத்திற்குள் மனைவி மூலமாக ஏதாவது பிரச்சனை வரும்போது, அன்போடு அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, காரியங்களை சரிப்படுத்த வேண்டும்.

அடுத்து, "**பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள். இது கர்த்தருக்குப் பிரியமானது.**" (கொலோ. 3:20) என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது.


அடுத்து, பெற்றோருக்கு ஆலோசனை சொல்லப்படும்போது, "**பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்.**" (கொலோ. 3:21) என்று வேதாகமம் ஆலோசனை சொல்கிறது. அதாவது, 'பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.' என்று ஒரு கட்டளையாகவும், ஆலோசனையாகவும் கர்த்தர் சொல்கிறார்.

அனேகக் குடும்பங்களில் பெரியவர்களும் இருப்பார்கள். அவர்கள் மனம் கசந்து கொள்ளும்படியான காரியங்களை ஒருபோதும் நாம் செய்யக் கூடாது.

பெற்றோர்களாகிய நீங்கள், கர்த்தர் உங்களுக்குக் கொடுத்திருக்கிற பிள்ளைகளை நல்ல வழியில் நடத்த வேண்டும். கர்த்தரைக் குறித்துப் போதித்து, சாமுவேலைப் போல வளர்க்க வேண்டும். ஏலி தன்னுடைய பிள்ளைகளைக் குறித்து கவலைப்படவே இல்லை. கர்த்தர் ஏலியின் பிள்ளைகளைக் குறித்து, அவரோடு பேசியபோது, "நியாயத் தீர்ப்பு உன் மீதும், உன்னுடைய குடும்பத்தின் மீதும் வரும்." என்று சொன்னபோதும், ஏலி அதைக் கண்டு கொள்ளவே இல்லை. காரணம், பிள்ளைகள் மீது கொண்டிருந்த அன்பு."

அப்படியல்ல. **கர்த்தரைத்தான் முதலாவது நாம் நேசிக்க வேண்டும்.** "இயேசுவே, எங்கள் குடும்பத்தில் நீரே தலைவராக இரும்! எங்களை போதித்து நடத்தும்!" என்று சொல்லி, ஜெபிக்க வேண்டும். அப்படியாக கர்த்தரிடத்தில் அர்ப்பணித்து ஜெபிக்கும்போது, கர்த்தர் நம்முடைய குடும்பத்தை அற்புதமாக நடத்துவார்.

ஏலி சாமுவேலை கர்த்தருக்கு நேராக வளர்த்தார். அதே சமயத்தில் தன்னுடைய பிள்ளைகளையோ, கர்த்தருக்கேற்றபடி வளர்க்கவில்லை என்பதாக, வேதாகமத்தில் பார்க்கிறோம்.



ஆகவே கர்த்தர், ஏலியையும், அவருடைய வீட்டாரையும் அழித்துப் போட்டார். ஏலி கர்த்தருடைய ஊழியக்காரன்தான். ஆனாலும், அவர் தன் பிள்ளைகளை கர்த்தரை குறித்த பயத்தோடு வளர்க்கவில்லை. ஆகவே அவருடைய குடும்பம் சாபத்திற்குள்ளானது.

எனக்கு அருமையானவர்களே, இன்றைக்கு நீங்கள் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்து கொண்டிருக்கலாம், நல்லதுதான்! ஆனால் உங்கள் பிள்ளைகளை கர்த்தருக்குள் வழி நடத்துகிறீர்களா? சற்று யோசித்துப் பாருங்கள். எத்தனையோ குடும்பங்களில் பெற்றோர் செய்கிற பாவம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு சாபமாக மாறும். ஏலி கர்த்தருக்குத்தான் ஊழியம் செய்தார். ஆனால் அவருடைய பிள்ளைகள் பாவம் செய்கிற காரியத்தில், கர்த்தர் அவர் மீது இரக்கம் காட்டாமல், நியாயத் தீர்ப்பைக் கொடுத்தார். ஏலியின் குடும்பம், நம்முடைய குடும்பத்திற்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கிறது. ஆகவே, ஏலியின் குடும்பத்தைப் போல நம்முடைய குடும்பமும் காணப்படக் கூடாது.

நாலுமாவடி ஊருக்கு அருகில், வங்கியில் வேலை செய்து கொண்டிருக்கக் கூடிய ஒரு சகோதரர் இருக்கிறார். அவருடைய மனைவி ஒரு கல்லூரியில் விரிவுரையாளராகப் பணி புரிகிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு 2 ஆண் பிள்ளைகளைக் கொடுத்திருக்கிறார்.

அவர்கள் கூட்டங்களுக்கோ, அல்லது ஆலய ஆராதனைக்கோ போகும் போதெல்லாம், தங்கள் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு போவார்கள். அவர்கள் சின்னப் பிள்ளைகளாக இருக்கும்போதே, அவர்களையும் முழங்காலில் நின்று ஜெபிக்கப் பழக்கினார்கள். கர்த்தருக்குப் பயப்படுகிற நல்ல பிள்ளைகளாக, தங்கள் பிள்ளைகளை அவர்கள் வளர்த்தார்கள்.

அந்தப் பிள்ளைகள் வளர்ந்து, மேல் படிப்புப் படித்து முடித்த உடனே, கர்த்தர் அவர்களுக்கு ஒரு நல்ல வேலையும் கிடைக்கச் செய்து, அவர்களை ஆசீர்வதித்து உயர்த்தி வைத்திருக்கிறார். இன்றைக்கும் அவர்கள் கர்த்தருக்குச் சாட்சியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பாருங்கள், அந்தப் பெற்றோர் கர்த்தரைப் பின்பற்றினார்கள். மட்டுமல்ல, தங்கள் பிள்ளைகளையும் கர்த்தருக்குப் பிரியமானவர்களாக வளர்த்தார்கள். அவர்கள் குடும்பமாகக் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக இருந்தார்கள். அப்படிப்பட்ட குடும்பங்களைத்தான் கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

அதே போல, நீங்களும் உங்கள் பிள்ளைகளை கர்த்தருக்குப் பிரியமானவர்களாக வளர்க்க வேண்டும். உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஒழுக்கத்தைச் சொல்லிக் கொடுத்து, அவர்களை வளர்க்க வேண்டும்.

இன்றைக்கு ஒருவேளை நீங்கள், கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவர்களாக இருக்கலாம். அந்த ஊழியத்தை நீங்கள் வேதனையோடு செய்கிறீர்களா? அல்லது சந்தோஷத்தோடு செய்கிறீர்களா? சற்று சிந்தியுங்கள். ஊழியப் பாதை வேதனை உள்ளதுதான். ஆனாலும், அதற்கு மத்தியில் நாம் கர்த்தருக்கு சாட்சியாக நிற்க வேண்டும்.

ஊழியத்தின் நிமித்தமாக, ஒரு முறை ஒரு குறிப்பிட்ட ஊரிலிருந்த ஒரு வீட்டின் மாடியில் நான் தங்கியிருந்தேன். கீழ் தளத்தில், தகப்பனார் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிற தன் மகளை திட்டிய சத்தம் என் காதுகளில் விழுந்தது. அவள் கல்லூரிக்குப் போன பிறகு நான் அவரிடத்தில் காரியத்தை விசாரித்தபோது, "நான் கஷ்டப்பட்டு, அவளை ஒரு மருத்துவக் கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைக்கிறேன்.

இப்பொழுது அவள், 'கல்லூரிக்குப் போக மாட்டேன்.' என்கிறாள். வீட்டில் படுத்துப் படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறாள். நான் காலையில் எழும்பி, என் காரியங்களை எல்லாம் செய்து விட்டுப் பார்த்தால், அவள் கல்லூரிக்குப் போகவில்லை! உடனே நான் அவளைப் பார்த்து, "உன்னை எவ்வளவு செலவு பண்ணி படிக்க வைக்கிறேன். நீ அதைக் கொஞ்சம் யோசித்துப் பார்..." என்று சொல்லி, அவளைக் கண்டித்து அனுப்பி வைத்தேன்." என்று சொன்னார்.

பாருங்கள், இப்படியாக அந்தத் தகப்பனார் தன் மகளைக் கண்டித்து படிக்க அனுப்பி வைத்தார்கள். இன்றைக்கு அவள் படித்து முடித்து, டாக்டராகி ஒரு நல்ல நிலைமையில் இருக்கிறாள். பிள்ளைகள் தவறு செய்யும்போது, அவர்களைக் கண்டித்து, நல்ல வழியில் நடத்த வேண்டும்.

ஒரு 'குடும்பம்' என்று சொன்னால், அந்தக் குடும்பத்தில் சந்தோஷமும், சமாதானமும் இருக்க வேண்டும்.

பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை ஒன்று போல் நேசிக்க வேண்டும்.

ஒருநாள், நம்முடைய தேவனுடைய கூடாரத்திற்குள் நான் நடந்து சென்று கொண்டிருந்தபோது, ஒரு சிறு பையன் என்னை நோக்கி வந்தான். நான் அவனிடத்தில், 'என்னய்யா?' என்று அன்போடு கேட்டபோது, 'ஆன்டி, எங்க அப்பாவை நீங்க கொஞ்சம் சத்தம் போடுங்க. என் தம்பிய வீட்டில வச்சு படிக்க வைக்கப் போறாங்களாம்! என்னை மட்டும் வெளியே எங்கேயோ கொண்டு போய் ஹாஸ்டல்ல சேர்த்து படிக்க வைக்கப் போறாங்களாம்! ஏன்னு என்று கேளுங்க"! என்றான். நானும் அந்தப் பையனுடைய தகப்பனிடத்தில் பேசி, அவருடைய தவறை உணர்த்தினேன்.

அந்த சின்னப் பையனுடைய உள்ளத்திற்குள் எவ்வளவு வேதனை இருந்திருந்தால், அப்படியாக என்னிடத்தில் சொல்லி இருப்பான்? என்று பாருங்கள்! ஆகவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நேசிக்கிற காரியத்தில், பட்சபாதம் காட்டவே கூடாது. அது பாவம்! எல்லோரையும் சமமாக நேசிக்க வேண்டும்.

**"இஸ்ரவேலின் முதிர்வயதிலே யோசேப்புத் தனக்குப் பிறந்ததினால், இஸ்ரவேல் தன் குமாரர் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்து, அவனுக்குப் பலவருணமான அங்கியைச் செய்வித்தான்.**

**அவனுடைய சகோதரர் எல்லாரிலும் அவனைத் தங்கள் தகப்பன் அதிகமாய் நேசிக்கிறதை அவன் சகோதரர் கண்டபோது, அவனோடே பட்சமாய் பேசாமல் அவனைப் பகைத்தார்கள்." ஆதி. 37:3,4.**

பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்குள் அன்பை, ஐக்கியத்தை உண்டாக்கிக் கொடுக்க வேண்டும். ஒருவரையொருவர் கடித்துப் பட்சிக்கிறவர்களாக அவர்கள் மாறி விடக் கூடாது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற நல்ல வழியில் நடத்த வேண்டும். மட்டுமல்ல, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சாபத்தை சேர்த்து வைத்து விடக் கூடாது.

ஒரு தகப்பன் குடிக்கிறவராக இருப்பாரானால், அவருடைய பிள்ளைகளும் குடிகாரர்களாகத்தான் மாறுவார்கள்! அந்த பாவப் பழக்கம் ஒரு சாபமாக குடும்பங்களில் தொடர்ந்து வரும். ஆகவே, பெற்றோர்கள் தங்கள் குடும்பத்திற்கு சாபத்தை சேர்த்து வைக்கக் கூடாது. பிள்ளைகளுக்கு ஆசீர்வாதத்தைத்தான் சேர்த்து வைக்க வேண்டும்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பு திறப்பின் வாசல் ஜெபத்தில்

# அழைத்த தேவனின் ஆசீர்வாதங்கள்!



தேசத்திற்காக திறப்பிலே நின்று ஜெபிக்க ஒவ்வொரு மாதமும் கொழும்பு பட்டணத்தில் நடைபெறும் திறப்பின் வாசல் ஜெபத்தில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு ஜெபித்து வருகின்றனர்.

ஜுலை 1ம் தேதி நடைபெற்ற திறப்பின் வாசல் ஜெபத்தில் சுமார் 216 பேர் மற்றும் 13 போதகர்கள் கலந்து கொண்டனர். **சகோ. ராகவன்** அவர்கள் பாடல் ஆராதனை வேளைகளை நடத்த **சகோ. ரூபன்** அவர்கள் தேசத்திற்காகவும் திருச்சபைகளுக்காகவும் பிரார்த்தனைகள் ஏறெடுத்தபோது ஜனங்கள் பாரத்தோடும் கண்ணீரோடும் ஜெபித்தனர்.

இறுதியில் **Pr. பிரான்சிஸ் சேவியர்** (இம்மானுவேல் ஜெப ஊழியங்கள்) தேவனால் அழைக்கப்பட்ட மக்களை தேவன் எவ்விதமாய் ஆசீர்வதிக்கிறார் என்பதை தெளிவாக பகிர்ந்து கொண்டு ஜெபித்த போது ஜனங்கள் அபரிமிதமாக ஆசீர்வதிக்கப்பட்டு மகிழ்வுடன் திரும்பிச் சென்றனர்.

முன்னதாக இந்த திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு தேவனால் ஆசீர்விக்கப்பட்ட மக்கள் சாட்சி கூறி கர்த்தரை மகிமைப்படுத்தினர். தேவ நாமம் வெகுவாய் மகிமைப்பட்டது.



சகோ. ராகவன்



சகோ. ரூபன்



Pr. பிரான்சிஸ் சேவியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்த்தர் செய்த அற்புதங்களில் சில...

### சுகத்தை கொடுத்தார்!



நாங்கள் ஒவ்வொரு மாதமும் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதங்களைப் பெற்று வருகின்றோம். கடந்த ஜூன் மாதம் 12ம் திகதி காலை 6:30 மணிக்கு மிகவும் மோசமான நெஞ்சு வலியினால் பாதிக்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டேன். எந்த விதமான ஆபத்துக்களுமின்றி தேவன் என்னைப் பாதுகாத்து இம்மாத திறப்பின் வாசல் ஜெபத்திலும் கலந்து கொள்ள கிருபை செய்தார். - **விக்டர் சௌந்தரநாயகம்,** தெகிவளை.

### சொந்த வீட்டை கொடுத்தார்!



நாங்கள் கடந்த இரண்டு வருடமாக திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு வருகிறோம். சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக எங்களுக்கு ஒரு சொந்த வீட்டிற்காக திறப்பின் வாசல் ஜெபத்தில் விண்ணப்பம் எழுதிப் போட்டு ஜெபித்தோம். தேவன் எங்கள் ஜெபத்தைக் கேட்டு நாங்கள் நினைத்துப் பார்க்காத அளவில் எந்த வித கடன்களும் இல்லாமல் 52 இலட்சம் ரூபா மதிப்புள்ள வீட்டைப் பெற்றுக் கொடுத்தார். - **மேனகா,** வத்தளை.

### ஜெபத்தை கேட்டார்!



'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்கள் மூலமாக ஒழுங்கு செய்யப்பட்ட இஸ்ரவேல் யாத்திரைக்காக பிரயாணப்பட்டு நானும் எனது பெற்றோரும் சென்று கொண்டிருந்த வேளை அம்மான் எனும் விமான நிலையம் வரைக்கும் சென்று அங்கிருந்து இஸ்ரவேல் தேசத்திற்கு செல்ல முடியாமல் என்னுடைய விசா மாத்திரம் மறுக்கப்பட்டது. அங்கு சுமார் 5 மணித்தியாலங்கள் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டோம். அந்த நேரத்திலே "என்னை இவ்வளவு தூரம் நடத்தி வந்தீர் வாக்குத்தத்த தேசத்தைப் பார்க்கவே" என்ற சிங்கள மொழிப் பாடலொன்றை பரிசுத்தாவியானவர் என்னுடைய உள்ளத்தில் தந்தார். அதைப் பாடிக் கொண்டிருக்கும் போதே எனக்கு இஸ்ரவேல் தேசத்திற்கான விசா வழங்கப்பட்டு, எங்களுக்காக காத்துக் கொண்டிருந்த "இயேசு விடுவிக்கிறார்" பிரயாணக் குழுவினருடன் சந்தோஷமாக எங்கள் பயணத்தைத் தொடர தேவன் கிருபை செய்தார். - **இவான்ஜலின்,** வத்தளை.

## கொழும்பில்

இயேசு விடுவிக்கிறார்

# திறப்பின் வாசல் ஜெபம்!

நாள்: 2017

**செப்டம்பர் 2, அக்டோபர் 7**

(சனிக்கிழமை)

நேரம்: **காலை 9:00 - மதியம் 2:00.**

இடம்:

***Christ Church Hall, Galle Face***

*(Near the Ramada Hotel)*

**தேவ செய்தியும், ஜெபமும்:**

**'இயேசு விடுவிக்கிறார்' குழுவினர்**

**தேசத்திற்காக ஜெபிக்கவும், தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் வாருங்கள்!**

நேரில் வர முடியாதவர்கள், உங்கள் தனிப்பட்ட, குடும்ப மற்றும் ஆவிக்குரிய பிரச்சனைகளுக்காக ஜெபிக்க வேண்டுமானால், கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்கு அனுப்புவோம்.

**கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்.**

முகவரி: 57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA. Ph: 011-2930 152.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநிலச் செய்திகள்:-


சகோதரி ஜாய்ஸ் லாசரஸ்

# பெங்களூருவில்
# குடும்ப ஆசீர்வாத முகாம்!

குடும்பங்களில் சமாதானம், அன்பு, ஐக்கியம் உண்டாக வேண்டும் என்கிற உன்னத நோக்கில், **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியங்கள் சார்பாக, குடும்ப ஆசீர்வாத முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த (2017) ஜூன் 17ம் தேதி, **பெங்களூரு**விலுள்ள வராதாச்சார் கலா மண்டபத்தில் வைத்து, **'குடும்ப ஆசீர்வாத முகாம்'** நடைபெற்றது. இந்த முகாமில் திரளான ஜனங்கள் குடும்பமாகக் கலந்து கொண்டார்கள்.

நமது சகோதரி **ஜாய்ஸ் லாசரஸ்** அவர்கள், பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில குடும்பங்களை ஆதாரமாக வைத்து, கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டு, குடும்பங்களின் ஆசீர்வாதங்களுக்காக மிகுந்த பாரத்தோடு ஜெபத்தை ஏறெடுத்தார்கள். தேவ செய்தியை சகோ. **அன்பு** அவர்கள் கன்னடத்தில் மொழி பெயர்த்தார்கள்.

ஜெப வேளையில், ஆவியானவர் பலமாய் ஊற்றப்பட்டார். பல குடும்பங்களில் இருந்த பிசாசின் கட்டுகள் தெறிபட்டன! அனேகருக்குள் இருந்த அசுத்த ஆவிகள் அலறிக் கொண்டு வெளியேறிப் போயின! வியாதியின் பிடியில் சிக்கித் தவித்த நிலையில் வந்திருந்த அனேகர் சுகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அற்புதங்களைப் பெற்றுக் கொண்டவர்களில் சிலர், சாட்சி சொல்லி கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

இந்த முகாமின் சகல ஏற்பாடுகளையும், சகோ. **P. செல்வின்** அவர்கள் மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார்! தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**- ஒருங்கிணைப்பாளர்.**

---

# காணிக்கை அனுப்புவோர்
## கவனத்திற்கு...



**'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்திற்காக, பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி ஊழியத்திற்காகக் கொடுத்து தாங்க விரும்புகிறவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

**A/C Name: Jesus Redeems Ministries - Sri Lanka, A/C No. 7010 1000 7680**
**Bank: Hatton National Bank PLC. Branch: Nawam Mawatha - Colombo -02. Swift Code : HBLILKLXXXX.**

### முக்கிய குறிப்பு!

நீங்கள் காணிக்கை அனுப்பிய பின்னர் நீங்கள் செலுத்தியதற்கான வங்கி சீட்டினையும், எந்த ஊழியத்திற்காக அனுப்பினீர்கள் என்ற விபரத்தையும், உங்களது முழு முகவரியுடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அல்லது தொலைபேசியின் மூலமாக தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, பதில் எழுத அது ஏதுவாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெத்செமனே
ஜெப மையம்
GETHSEMANE
PRAYER CENTRE

உங்கள் சிறையிருப்பு மாற வேண்டுமா?

# தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

# வத்தளையில்

தனியாக...
குழுவாக...
சபையாக...
ஜெபிக்கலாம்...

தினமும் காலை 9:00 மணிமுதல்,
மாலை 6:00 மணிவரை.

## நடைபெறும் ஊழிய விபரங்கள்

| | |
|---|---|
| **பெண்கள் ஜெபம்!**<br>(வியாழக்கிழமைதோறும்)<br>10:00 A.M. - 1:00 P.M. | **உபவாச ஜெபம்!**<br>(சனிக்கிழமைதோறும்)<br>10:00 A.M. - 1:00 P.M. |
| **குடும்ப ஆசீர்வாத கூடுகை!**<br>(ஒவ்வொரு மாதமும் போயா தினத்தன்று)<br>10:00 A.M. - 1:00 P.M. | **மாணவர்கள் கூடுகை!**<br>(2வது, 3வது சனிக்கிழமைதோறும்)<br>4:00 P.M. - 5:00 P.M. |



சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களின் செய்திகள் அடங்கிய சி.டி.க்கள், புத்தகங்கள் கிடைக்கும்.

கிளை அலுவலக முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.*

உங்கள் அவசர ஜெப அழைப்பிற்கு 011 - 2930 152, 071 437 1111 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளவும்.

ஜெபியுங்கள்! சிங்கப்பூரில் 'இயேசு விடுவிக்கிறார்'

## 12 மணி நேர - திறப்பின் வாசல் உபவாச ஜெபம்!

நாள்: 2017 செப்டம்பர் 8 (வெள்ளி)
நேரம்: காலை 9:00 - இரவு 9:00.

Place: St. Andrew's Cathedral, 11 St. Andrew's Road 178959, Nearest MRT Station: City Hall interchange (Exit B).

**விடுதலைப் பெருவிழா!**

இடம்: Singapore Khalsa Association, 2 Tessensohn Road, 646, Nearest MRT: Farrer Park (Exit B) Singapore 217

நாள்: 2017 செப்டம்பர் 9, 10 (சனி, ஞாயிறு)
நேரம்: மாலை 7:00 - இரவு 10:00.

**பெண்கள் சிறப்புக் கூடுகை!**

நாள்: 2017 செப்டம்பர் 6 (புதன்) நேரம்: மாலை 7:30 மணிக்கு.
இடம்: சிமிர்னா அசெம்பிளி, 3 Yishun Street 11.

தொடர்புக்கு: Bro. Samuel Sathiyanathan - 9735 7763, Bro. Julius - 8125 7634, Bro. Barnabas - 9027 2341.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணத் தவறாதீர்கள்!

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்!



**ஏஞ்சல் டி.வியில்** தினமும் காலை 7:30 - 8:00,
இரவு 11:30-12:00.

செவ்வாய்கிழமை தோறும் காலை 10:00 - 10:30.

சனிக்கிழமை தோறும் மதியம் 2:30 - 3:00.

**சுவர்க டி.வியில்**

ஞாயிறு முதல்
வெள்ளி வரை
காலை 7:30 - 8:00
மணிவரை.

பாடல்கள், நாடகங்கள்,
சாட்சிகள்
மற்றும் பல...
ஞாயிறு முதல்
வெள்ளி வரை
காலை 7:30 - 8:00 மணிவரை.

LBN
The Cable TV Network

**Dialog TVயில்**
(God Channel)

ஞாயிறு முதல் வெள்ளி வரை
காலை 7:30 - 8:00 மணிவரை.



**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களின்
தேவ செய்திகளைக் கேட்டு,
*ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!*

PRINTED BY S. A. PRINTERS, 57/3, LOTUS GROVE, THIMBIRIGASYAYE, HENDALA
Registered in the Department of Posts of Sri Lanka under QD/119/News/2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org